SRI LANKA
RECEIVED
1980-7-28
PERIODICALS DIVISION
UNIVERSITY ★ LIBRARY ★ CAMPUS


ஓம் சிவமயம்





# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

**தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது**



வழிபாட்டு நெறி விளக்கும் மலர்
இதழ்: 3 சுடர்: 12
ரௌத்திரி வருஷம் சித்திரை மீ 7ம் உ
வெள்ளிக்கிழமை [ 9-5-1980 ]



# வழிபாடு வியாபார மார்க்கமாக்கப்பட்டது வருத்தத்திற்குரிய செயலாகும்

# நாயன்மார் பாடல்கள் வழிபாடுபற்றி மக்களுக்கு கூறுவது என்ன?

## கீழேவரும் பாடல்கள் இவற்றை நமக்கு நன்கு விளக்கமாகக் கூறுகின்றன

## பூவும் நீருங்கொண்டு மக்கள் தாமே வழிபடும் காலத்தைச் சந்திரதீபம் எதிர்பார்த்து நிற்கிறது

கீழே தரப்பட்ட எம்பிரான் திருஞானசம்பந்தரது தேவாரத்தை நன்கு நீங்கள் வாசித்து உணர்ந்தால் கோயிலில் யாவரும் சென்று வழிபடலாம் என்பது எவருடைய சிந்தைக்கும் தெளிய வரும். இந்த உண்மைகள் பொது மக்கள் அனைவருக்கும் புரியாமதென்றே நம்புகின்றோம். பலகாலமாக எம்நாட்டில் பிராமண சமுதாயம் செய்து வந்த பழிபாவங்களுக்கு அளவே இல்லை. உண்மையாகச் சைவமக்களில் பஞ்சமா பாதகங்களைக் கூசாமற் செய்யக்கூடியவர் யாரென்று பார்த்தால் அவர்கள் பிராமணராகவே இருப்பார்கள். பஞ்சமாபாதகங்களில் ஏனைய எல்லாவற்றிற்கும் வித்திடுவது பொய். இன்று பிராமணர் அல்லாத சமூகத்தில் உள்ளவர்கள் பேசுகின்ற பொய்யிலும் பிராமணர் கூடவே பொய் பேசுகிறார். எந்த ஒரு பிராமணரை பொய் பேசாதவர் இவர் என்று எனக்குக் காட்டினால் நான் அவருக்குப் பணியத் தயாராக இருக்கிறேன். பிராமணரது குல வாழ்வைப்பற்றி சம்பந்த பெருமான் என்ன அற்புதமாகப் பேசியிருக்கிறார். தயவு செய்து அதைப் படியுங்கள். பொய்யிலா மெய்ந்நெறிக்கே தகநின்றார் அன்று நாட்டில் இருந்த அந்தணர் என்கின்ற போது அத்தகைய பிராமணர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பதைச் சற்றே சிந்தியுங்கள். இன்றுள்ள பிராமணர்கள் எந்த நெறியில் இருக்கிறார்கள்? உண்மையில் இன்றுள்ள பிராமணர் எவரையேனும் பூசை செய்ய அனுமதிப்பது மிகப்பாதகமான செயல் என்பது சந்திரதீபத்தின் கருத்தாகும்.

திருஞானசம்பந்தர் இன்று இருந்திருந்தால் ஒரு பிராமணனையும் கோயிலினுள் போக அனுமதிக்கமாட்டார். வெளிப்புறத்தில் தானும் நிற்க அனுமதிக்கார். இப் பிராமணர் செய்யும் சதி நட்டம் அப்பாடா கொஞ்ச நஞ்சமல்ல. இவனை இவனது மனைவியே மதிக்கிறாள் இல்லை. பிராமணக் குடும்பங்களில் பிராமணப் பெண்களின் நடத்தை பற்றிக் குறிப்பிட வேண்டியுளது. அவரது நடத்தைகள் அவர்களின் கணவன்மாரின் சீலமின்மையையே குறிக்கிறது. மெய் நெறிக்குரிய பிராமணர் பொய்ப்பேச மனைவியின் நடத்தை என்னாகும். அவள் எதை விரும்புவாள். இவை எல்லாவற்றையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். கற்பு நெறியை உண்மையான நடத்தையால் பெறலாமே அன்றி பொய்யான நடத்தையால் பெற முடியாது.

அடுத்து பெண் இச்சையை உண்மை பேசுவார் மட்டுமே வெல்வார். பொய் பேசுவோர் இதிலிருந்து தவறமுடியாது. எத்தனையோ கோயில் எஜமான்கள் கோயிற் சொத்தைத் தின்று சேர்க்கடித்தவர்கள் மடப்பள்ளியில் கடலைக் காரியுடன் தகாத முறையில் நடந்து கொண்ட வரலாறு உண்டு. 60 வயதுக் கோயில் எஜமானர் இளவயதுப் பெண்ணை இரண்டாந்தாரமாக வைத்திருந்த வரலாறும் உண்டு. இப்படியான எஜமானின் பழுதான காசு பழியான வழிக்கே செலவழியுமே அன்றி நல்ல வழிக்குப் பயன்படாது. அருமந்த மனிதப் பிறவியை கெடுக்கும் வழியிலேயே பயன்படுத்தப்படும்.

வட இந்தியாவில் எங்கு சென்றாலும் சுவாமியைத் தீண்டி வழிபடக்கூடிய நிலை உண்டு. ஆனால் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் இம்முறை இல்லை. தென் இந்தியாவில் ஏதோ தூய்மையான அந்தணர் எனப் பேச்சு எழுந்துளதனால் அவரல்லாத ஏனையோர் ஆலயங்களில் பூசைசெய்யக்கூடாது என்ற ஒரு முறையை வகுத்தவுடன் இந்த முறை பிராமணர் ஒழுங்கங்கெட்டாலும் அவரே பூசை செய்ய வேண்டும்; அவரல்லாதார் ஒழுக்கமுடையவராயினும் ஆலயங்களில் பூசை செய்திட அருகதையில்லாதவராகிறார் என்ற ஒரு நிலைக்கு வந்திட பிராமணன் எப்படி நடந்தாலும் அது சரி என பிராமணனுக்கும் பிழையான வழியில் நடக்கத்துணிவை ஏற்படுத்தியது.

ஐயோ இந்த ஒழுக்கம் கெட்ட சண்டாளன் தன்னது தூயதொண்டு பெருமையுடையது. ஆதலினால் தான் நல்நெறிப்பட்டு வாழவேண்டும் என எண்ணாது கக்கூசு கழுவும் தொழிலாளிபோல தொழிற்சங்கம் வைக்கவும் தலைப்பட்டான். நல்லூர்க் கந்தசாமி கோவிலில் இப்படி ஒரு நிலை ஏற்பட்டது.

பொய் பேசு பிராமணன் தூய்மையானவனோ? பதில் தரட்டும். தென் இந்தியா எவராயினும் கீழேயுள்ள தேவாரத்தின் கருத்தை உணர்ந்த பின் நாம் சொலவது பிழையோ என்பதை வெளிப்படுத்தட்டும்.

இன்று எமது சைவ நெறி பொய்மையாலும் போலித்தனத்தாலும் நீண்டு கொண்டிருக்கிறது. கோயில்கள் யாவும் பொய்யாலும் போலித்தனத்தாலும் மூடப்பட்டுள்ளன. எந்த ஒரு கோயிலில் உண்மை இருக்கிறது? காட்டுங்கள். நெஞ்சை ஒழித்து வஞ்சகம் இல்லை. உங்கள் நெஞ்சத்திடம் கேட்டுப் பாருங்கள் நாம் சொல்வது பிழையென்றால் எங்கு அப்படி ஒரு கோயிலைக் காட்டுங்கள். எந்தக் கோயில் பிராமணன் மனமார ஒழுங்காகப் பூசை செய்கிறான் காட்டுங்கள். குணங்கெட்ட பின் குலமும் கோத்திரமும் எப்படி வரும்? குலத்துக்குரிய குணமும் கோத்திரத்திற்குரிய ஒழுக்கமும் இல்லையே! எந்த இடத்தில் இருக்கு காட்டுங்கள். குலத்தளவே ஆகுமாம் குணம் என்று ஔவை பாடினாளே! அதன் அர்த்தம் என்ன? இதைச் சிந்தையில் கொள்ளுங்கள். பிராமணன் தன் குலத்திற்கு உரிய குணம் கெட்டபின்னும் அவன் பூசை செய்ய வேண்டும் என்பதில் அர்த்தம் இல்லை.

இவ்வளவு காலமும் பிராமணனால் உருவாக்கப்பட்ட அழுக்கு கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே பாடல் பெற்ற தலமெல்லாம் இவனுடைய அழுக்குடைய நடத்தையால் பாழடைந்து விட்டன. எந்தக்காலத்திலும் சென்று உட்புக முடியாத வகையில் பெரும் பழிகளை அவன் பெருக்கிவிட்டான். பிராமணரில் உண்மையில்லாதபோது இவன் பூசைசெய்வதில் ஏதும் பலனில்லை என்பதை உறுதியுடன் நம்புங்கள். இந்த நம்பிக்கையை நீங்கள் கடந்தால் உந்த ஒரு ஆலயத்திலும் அருள்நெறி காண முடியாது. நம்பிக்கை இருந்தால் நிச்சயமாகத் தும்பிக்கையுடைய பெருமான் அருள்கிட்டும். பொய்மை என்றும் சிறக்காது என்பதை உறுதியுடன் நம்புங்கள். சைவநெறியில் உண்மையானது பூவும் நீரும் விளக்கும் இவையே இறைவனால் விரும்பப்படுவது. இதை ஒவ்வொரு சைவமக்களும் உணர வேண்டும், எங்களுக்கு கோயில் வேண்டும். கும்பிடுவதற்கு அருள் பெறுவதற்கு. கோயில் விண் [illegible] திருவிழாக்கள் செய்து தங்களிடமுள்ள பணச் செருக்கைக் காட்டுவதற்கு அல்ல. நாங்கள் இறைவனுக்கு அடியவர்கள் என்று உணர்ந்து எம்மை இவ்வுலகுக்கு வரச்செய்த அவன் கருணையை உணர்ந்து நித்தலும் வழிபடவே கோயில். இவ்வழிபாட்டுமுறை எங்கே நடக்குது காட்டுங்கள். திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்தது. பாதகப் பிராமணரும் தருமமுணராத சண்டாளரும் திருவிழாச்செய்து சோக்கடிக்கப் பல பாதகராலும் சண்டாளராலும் எம் சைவநெறி அழிந்தொழிந்தது. ஒரு கோயிலில்போய் வழிபட்டுக் கும்பிட முடியாதுவிட்டது. இவை மீளப்பெருக நாம் விடமுடியாது. இப்படி இன்னும் நீளப்பெருகினால் மக்கள் மனதில் பத்திமை அழியும். கடவுளை ஒருவரும் மதியார்கள். முடிவு சைவக்கோயில்கள் எல்லாம் சினிமாக் கொட்டகைபோல வேடிக்கை விழா விநோதம் பெருக்கும் இடமாகவே மாறும். வழிபாட்டிற்குரிய இடமாக எந்தக்கோயிலும் இருக்காது. ஆகவே நாயன்மார் காட்டிய உண்மைநெறிகளை மீண்டும் எமது ஆலயங்களில் புகுத்திட நீங்கள் விரும்பின் எல்லா மக்களையும் தாம்தாம் பூ நீர் எடுத்துச்சென்று தூபமும் தீபமும் ஏந்திச்சென்று இறைவனை வழிபடவிடவேண்டும். இந்தமுறையில்வழிபடுவதற்கு இன்றைய நிலையங்களில் யாருக்குமேவழிபடஉரிமையுண்டு. இறைவனிடத்து பூரண பக்தியோடு அவனது நல்நாமத்தைச் சொல்லிக் கொண்டு எல்லாக் கோயிலிலும் யாரும் ஏதுக்கும் மனங்கோணாமற் சென்று நீர்வார்த்து பூவும் இட்டு வழிபடலாம் என்பதைச் சந்திர தீபம் உறுதியுடன் தெரிவிக்கிறது. நாயன்மார்கள் இப்படியாக மக்கள் வழிபட்டனர் என்று தம் தேவாரப் பதிகத்தில் திடமுடன் தெரிவிக்கையில் நாம் ஏன் பயப்பட வேண்டும். இப்படியான வழிபாட்டு முறையில் தான் ஆலயங்களில் உண்மை பெறலாம் பொய்யும் தீமையும் அகலும் என்பதைச் சந்திர தீபம் உறுதியுடன் தெரிவிக்கிறது. கீழே தரப்பட்ட தேவாரத்தைக் கொண்டு நாம் சொல்வது தவறென்று நிரூபிப்பவர்க்கு இலட்ச ரூபா பரிசு வழங்கப்படும். பொய்யன்று மெய்யே.

ஆகவே சைவ மக்களிடம் நீண்ட காலமாக பெருகிவந்த பொய்யையும் போலித்தனத்தையும் அகற்றி உண்மை வழிக்கு எம்மை அமைத்துக் கொள்ள சந்திரதீபம் தெரிவிக்கும் யோசனையை எல்லா ஆலய நிர்வாகங்களையும் ஏற்கும்படி மிகத் தயவாகக் கேட்டுக்கொள்கிறேம்.

கோயில்சொத்தில் சீவனம் நடத்தினார்க்கு கோயில்களிலே பலபழிகளையும் பெருக்கி நின்ற பிராமணர்க்கு நாம்தெரிவிக்கும் கருதது வேதனையாக இருக்கிறது. ஆனால இது திருவருளுக்கு ஏற்கப்படப்போகிறது என்பதை சந்திரதீப உறுதியுடன் சொல்கிறது. நாயன்மார் காணபிக்காத வழியை சந்திரதீபம் ஆதரிக்காது. ஆகவே சைவ மக்கள் அத்தனைபேரையும் பின்தொடரும்படி சந்திரதீபம் பணிவன்புடன் கேட்டுக் காள்கிறது.

சந்திரதீபம் பொய்யிலாத மெய்நெறியையே உங்கள்முன் புகட்டுகிறதென்பதை முற்றும் நம்புங்கள். ஆலயங்கள் எல்லாவற்றிலும் பொய்மையும் போலித்தனமும் அகன்று உண்மை பிரகாசிக்கத் தினம் தினம் பாலும், பூவும், நீரும் கொண்டு சிவனை வழிபடுதலே சாலசிறந்தது. ஒன்றுக்கும் அஞ்சாதீர் ஒரு பொல்லாப்பும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தணர் அருள்நிலையும் எம்பெருமான் ஆலயத்து ஆசாரசிரத்தையும்
### கும்பிடுவார் கொள்கைகளும் தெரிவிக்கும்
## எம்பிரான் சம்பந்தர் திருப்பதிகம்

### அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
### தொக்கிருந்த மார்பினன் தோலுடையான் வெண்ணீற்றன்
### புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
### தக்கிருந்தார் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.

மண்டைஓடுகள் கோர்த்த எலும்புமாலையும், படமெடுத்தாடும் நாகபாம்பும், ஆமையோடும் ஒருங்கே அமைந்திருந்த மார்பினையுடையவன். புலித்தோலை உடையாக உடையவன். வெண்மை ஒளிபொருந்திய நீறணிந்திருப்பவன். புகுந்திருந்த மிகப்பழமையான கோயில் யாதெனின் பொய்மையிலாத மெய்மையான நெறிக்கு தம்மைஆளாக்கி வைத்திருந்த பெரியோர்கள் வாழும் திருஆர்க்கூர் என்னும் ஊரில் இருக்கும் தான்தோன்றி மாடம் என்னும சிவஆலயமாகும்.

பொய்யிலாத மெய்நெறி என்பது பொய்மையுடைய உலகபோகச் சிறப்புக்களை எண்ணாது அழிவற்ற நித்திய இன்பப்பேருன முத்திநெறிக்கே தம்மை ஆளாக்கினர் என்றவாறு. உலக வாழ்வின் முடிவு நரகம புகுதலே. அதை எல்லாரும் விளங்க வேண்டும். ஆனல் இந்த நரகவாழ்வு அல்லது நரகப்புகுதலை உண்மை நெறி ஒழுகல் தான் நீக்கவல்லது. ஒழிப்பு மறைப்பு இன்றி உண்மைபேசி என்றும் வாழ்ந்த பெருமக்கள் திருஆக்கூரில் இருந்ததால் பொய்யிலாத மெய்நெறிக்கே தக்கிருந்தார் எனப்பட்டது. இதை இன்று உணரக்கூடிய மக்கள் மிகக்குறைவாகும். வேடிக்கை கேளிக்கை பலவிருந்தும் சிரித்துக் கும்மாளமடித்து இன்பம் இதுதான் என வாழ்ந்த வாழ்வுமே மீளமுடியாத துன்பத்தில் முடியுமென அறிஞர் நிச்சயித்துள்ளார்கள். சுருதி, யுத்தி, அனுபவம் என்னும் மூன்றினலும் தெரிந்த உண்மை இதுவாகும். இதை இன்று நம்பாததனல் பல சிக்கல்களுக்கு ஆளாகின்றார்கள். ஆகையினலே இந்த சிக்கலை வருவிப்பது பொய் என்பதை முன்னைப் பெரியோர்கள் நன்கு உணர்ந்தமையினலே பொய் நீக்கி மெய்போங்கத் தலைப்பட்டார். ஒவ்வொரு தமிழ்மக்களும இதை நன்கு உணரவேண்டும். ஆதலினலே பொய்யிலாத மெய்நெறியிற் தக்கிருந்தார் எனக்கூறுகின்றார் திருஞானசம்பந்தர்.

### நீரார வார்சடையான் நீறுடையான் ஏறுடையான்
### காரார்பூங் கொன்றையினன் காதலித்த தொல்கோயில்
### கூரார்ல் வாய்நிறையக் கொண்டயலே கோட்டகத்தில்
### தராமல்கு ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.

கங்கைநீர் ஆர்ந்து விளங்கும் சடையையுடையவன். திருநீறணிந்தவன். இடபவாகனம் உடையவன். கறுத்த மேகந்தங்கும் கொன்றைமலர் மாலை அணிநதவன். காதலித்து அமர்ந்திருந்த மிகப்பழமையான கோயில். கூரிய அலகுடைய தன் சொண்டில் குளத்தில் உள்ள இரையைக் கௌவிக்கொண்டு தாரா குளத்தினருகே நிறைய இருக்கும் தருஆக்கூரில் தான்தோன்றி மாடமென்னும் இச் சிவாலயமாகும்.

நீரார்ந்த சடையும் திருநீற்றின் பொலிவும் இடபம் கொண்டதும் அன்றும் இன்றும் என்றும் உலக இயக்கத்தின் பொருட்டு எம்பிரான் சிவன் தாங்கிக்கொண்ட பொருட்களாகும். உலகம் இயங்கும் பெருமைகளை இவை குறிப்பன. இதன் அற்புதங்களை விபரித்தெழுத முடியாது. இத்தலம் மிகப் பழமையானது. தோன்றிய காலம் காலஆராய்ச்சிக்கு எட்டாதது என்றதால் தொல்கோயில் என்றார்.

### வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
### தோளாகம் பாகமாப் புல்கினன் தொல்கோயில்
### வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
### தாளாளர் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.

வாள் போன்ற கூரிய கண்களும் சிவந்த பவழம் போல் வாயும் கொண்ட பெரிய இமயமலை அரசனின் புத்திரியான உமையம்மையாரின் தோள்களை தன் மேனியின் ஒருபாகமாக பொருந்த அணைத்துக் கொண்டவன் வீற்றிருக்கும் பழமையான கோயில்.

வேளாளர் என்று சொல்லப்படுபவர்கள் தங்களது கொடையினல் மிகுந்து சிறந்து இருக்கின்ற தளராத வழ்வுடையவர்கள். அததகையோர் தங்கி வாழும் திருஆக்கூர் என்னும் ஊரில் தான்தோன்றி மாடம் என்கின்ற இக்கோயிலாகும்.

அடுத்து இங்கு சத்தியும் சிவமும் ஒன்றாயிருக்கின்ற பெருமை பேசப்படுகிறது. அடுத்து அம்மாளின் அனுக்கிரகம் இல்லாதிருந்தால் உலகில் எந்தச் செழிப்புமில்லை. வேளாளர்க்கு கொடைக்குச் சிறப்பாவது அவர்களுடைய விளைச்சல் நெற்களின் தாள் குன்றாது ஓங்குவதால் இவர்களைத் தாளாளர் என்றார். ஒரு ஊரில் சிவனது அருள்தான் நல்மழையையும் விளைவின் பெருக்கத்தையும் தருவது. பொருட் சிறப்புடன் இருந்தாலும் சிவனருள் இல்லாவிட்டால் கொடை ஒருபோதும் சிறக்காது. எத்தனையோ மக்களிடம் ஆயிரக்கணக்கான புசல் நெல் இருக்கும். ஆனல் ஒரு நெல் சும்மா கொடுக்க மனமவராது. ஆனதினலே இங்கு ஆக்கூரில் உள்ள வேளாளர் இல்லாதசெல்வம் தமக்கு நேராகக் கிடைத்தபோது அதைப் பலருக்கும் கொடுத்து மகிழும் ஒருபேறு பெற்றுக் கொண்டமையைக் குறிப்பிடுகின்றார். சிவனருளின் பெருக்கம் கொடையின் சிறப்பு என்பது இங்கு தேவாரத்தில் வேளாளரைக் குறித்த காரணமாகும்.

தாளாண்மை தயவு தாட்சண்யம் இவைமூன்றும் வேளாளர் என்போர்கண்ணே உள.

### கொங்குசேர் தன்கொன்றை மாலையினன் கூற்றடரப்
### பொங்கினன் பொங்கொளிசேர் வெண்ணீற்றன் பூங்கோயில்
### அங்கம் ஆறேடும் அருமறைகள் ஐவேள்வி
### தங்கினர் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.

அழகு செறிந்த குளிர்ந்த கொன்றை மலர் மாலை அணிந்தவன். இயமன் தன் கொடுமை அடங்கும்படி கோபத்தால் பொங்கி எழுந்தவன். பொங்கும் ஒளிகொண்ட வெண்மை நீறணிந்தவன் எம்பிரான் சிவன் இருக்கும் பூங்கோயிலாவது வேதங்கள் நான்குடன் அங்கங்கள் ஆறும் ஐந்துவகை யாகங்களும் தம்மிடத்துத் தருகும் புண்ணியமுடைய அந்தணர்கள் வாழ்கின்ற திருஆக்கூர் என்னும ஊரில்த தான்தோன்றிமாடம் என்னும் சிவாலயமாகும்.

வேதங்கள் நான்கும் இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என்பதாகும். அங்கங்கள் ஆறு சிக்ஷை வியாகரணம், நிருக்தம், சோதிடம், கற்பகம், சந்தோபிசிதம். இவற்றுட் சிக்ஷையாவது வேதத்தின் உச்சாரண லக்கணத்தை உணர்த்துவது. வியாகரணமாவது வேதத்தின் பல லக்கணத்தைவிபரிப்பது. நிருத்தமாவது வேதத்தின் பதங்களுககு விவரணங்கூறுவது. சோதிடமாவது இலக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிக கருமங்களைச் செய்தற்குரிய காலத்தையறிவிப்பது. கற்பமாவது ஆசுவாலாயநீயம் போதாயநீயம் ஆபத்தம்பம் முதலிய சூத்திரங்களிலிருந்து வைதிக கருமங்களைப் பிரயோகக்கும் முறைகளைக் கூறுவது. சந்தோபிசிதமாவது: வேதங்களின உக்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்கரசங்கிகையை கற்பிப்பது. வேத ருடனுக்குச் சந்தோபசிதம் பாதமும் கற்பங்களும் நிருத்தங் காதுகளும் சிட்சை நாசியும் சோதிடங் கண்களும் வியாகரணம் முகமுமாம். யாகம் ஐந்து : பிரமம், தெய்வம், பூதம், பிதிர் மானுடம் இவற்றள் வேதமோதல் பிரமயாகம். ஓமம் வளர்த்தல் தெய்வயாகம்: பலியிடுதல் பூதயாகம், தர்ப்பணமுடிக்கல் பிதிர்யாகம். இரப்போர்க்கு உணவு முதலிய ஈதலே மானுடயாகம். இவற்றினைச் சிந்தையில் கொண்டால் அந்தணன் எனபோரிடம் என்ன பொருள் தங்கியிருந்

## யோகசுவாமி பாடல்

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி-கிளியே!
இரவுபகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி-கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி-கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தை பட்டாலென்
கர்த்தன் திருவடிகள்-கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி-கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

பருதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதடி-கிளியே!
படைகள்மோதில் மாயாதடி.

அந்தமாதியில்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனடி-கிளியே!
சீரார் நல்லூராசானடி.

வந்ததிலும் போனதிலும்
மனத்தை வையாதேயென
விந்தையுடன் சொன்னனடி-கிளியே!
விளங்குநல்லூர் வாசனடி.

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலென்ன
காதலுடன் சொன்னனெடி-கிளியே!
கலங்காத வீரனெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னலெடி-கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

## காசிக்குச் சென்றும்
### நரைத்த தாடி கறுக்கவில்லை

ஒருவர் இந்திய தல யாத்திரை செய்ய விரும்பினர். காசிவரையும் போக எண்ணினர். அதற்காக யோகசுவாமியின் ஆசியை பெறுவதற்கு அவர் சந்நிதி சென்று தமது விருப்பத்தைத்தெரிவித்தார். சுவாமி அதற்கென்ன நீ போய்வாவேன் என்றார். இந்த ஆசியைப் பெற்றுக்கொண்டு அவர் இந்தியா செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்தார். பின் புறப்படும் தினத்தன்று அதிகாலை எழுந்து யோகசுவாமியை தரிசித்துக்கொண்டு செல்ல விரும்பி சுவாமியை சென்று வணங்கினர். அப்பொழுது சுவாமி இன்று புறப்பாடோ என்று கேட்டார். அவர் ஓம் சுவாமி நான் தென்னிந்தியத் தலங்களையும் பார்த்து காசிக்கும் போக எண்ணம் என்றார். அப்போது சுவாமி அவரை நோக்கி ''ஓம் நானும் காசிக்குப் போனனான், நரைத்த தாடி அங்கு கறுக்கவில்லை'' என்று தமது தாடியைத் தடவிக்கொண்டு கூறினர். அதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்று இன்று உணருகின்றேன் எனக் கொழும்புத்துறையைச் சேர்ந்த எனது நண்பரொருவா கூறினர்.

தென்னிந்தியத் தலயாத்திரையென்று பலர் சொல்வார்கள். ஆனல் எங்கு சென்றாலும் கடவுள் ஒருவனே என்பதை உணர்வார்க்கு, அங்கிருந்தாலென்ன இங்கிருந்தாலென்ன என்ற உண்மை தெளிவாகுமென்பதைச் சுவாமியினுடைய இந்த வாக்கியம் தெளிவாக்குகிறது.

பல அதர்மவழிகளாலும் பொருள்தேடி இரப்பார்க்கு ஈயமனமின்றி அப்பொருளை இந்தியா கொண்டுசென்று அதாவது நேர்மைவழி இன்றித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இன்று என்ன பொருள் தங்கியிருக்கிறது. இதைத் தமிழ்மக்கள் சிந்திக்கவேண்டும். உண்மையாக மேலே சொல்லிய வேதம் அங்கம் யாகம் இலங்கை நகரிலோ இந்தியாவிலோ சரி எந்த அந்தணரில் தங்கியுள்ளது காட்டவல்லீரோ? ஒரு ஊரில் ஒரு அந்தணர் இருப்பதாயின் அந்த ஊர் எவ்வளவு சிறப்படையும் இதை சிந்தையில் கொள்ளமாட்டீரோ?

**வீக்கினான் ஆடரவம் வீந்தழிந்தார் வெண்டலையென்<br>பாக்கினான் பலகலன்க ளாதரித்துப் பாகம்பெண்<br>ஆக்கினான் தொல்கோயில் ஆம்பலம்பூம் பொய்கையுடை<br>தாக்கினார் ஆக்கூரில் தாதரேன்றி மாடமே.**

ஆடும் பாம்பை அரையில் கச்சாக இறுகக் கட்டினான். இறந்து அழிந்தாருடைய வெள்ளைத் தலைகளையும் எலும்பையும் பல ஆபரணங்களாகத் தனக்கு ஆக்கிக்கொண்டவன். மிக்க ஆதரவுடன் ஒரு பெண்ணைத் தனதொருபாகமாக்கினான் வீற்றிருக்கின்ற மிகப் பழமையான கோயில். அழகிய நிறமுடைய ஆம்பல் மலர்கள் மலர்ந்திருக்கும் பூந்தடாகம் சூழ அமைந்திருக்கும் திருஆக்கூர் என்னும் ஊரில தான்தோன்றிமாடம் என்னும் அக்கோயிலாகும்.

இப்பாடலில் இறந்தார் எலும்புமாலையை ஆபரணமாக அணிகிற சிறப்புப் பேசப்பட்டது. திருஆக்கூரைச் சூழ தாமரை முதல் ஆம்பல்மலர்கள் நிறைந்ததெனவும் பேசப்படுகிறது.

**பண்ணொளிசேர் நான்மறையான் பாடலினோ டாடலினான்<br>கண்ணொளிசேர் நெற்றியினான் காதலித்த தொல்கோயில்<br>விண்ணொளிசேர் மாமதியந் தீண்டியக்கால் வெண்மாடம்<br>தண்ணொளிசேர் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.**

பண்ணின் ஒளி (அருளின் பிரகாசம்) சேர்ந்த நான்கு வேதங்களையும் பாடுகின்ற பாடலனோடு ஆடல் உடையவன். அத்துடன் பிரகாசமுடைய ஒளிவிளங்கும் கண்சேர்ந்த நெற்றியுடையவன். காதலித்து வீற்றிருக்கும் பழமையான கோயில். அங்கு வானின ஒளிகொண்ட சந்திரனுடைய நிலவு வந்து தீண்டிய நேரத்தில் அடுக்குமாளிகையின் மேல் உள்ள வெள்ளைமாடங்கள் குளிர்ந்த ஒளியைப் பரப்பும் திருஆக்கூரில் தான்தோன்றிமாடம் என்னும் கோயில் என்பதாம்.

இது முற்காலத்திலே இருந்த கட்டிட அமைப்புக்களின் சிறப்புகள் சொன்ன பாடலாகும். இவ்வளவு சிறப்பாக இருந்த தமிழ்நாடு கீழ்மைப் பட்டுக்கொண்டதன் காரணம் அந்த சிவ வழிபாடு குன்றியதென்பது இனிச்சொல்லவும் வேண்டுமோ.

**வீங்கினார் மும்மதிகளும் வில்வரையால் வெந்தவிய<br>வாங்கினார் வானவர்கள் வந்திறைஞ்சுந் தொல்கோயில்<br>பாங்கினார் நான்மறையோ டாறங்கம் பலகலைகள்<br>தாங்கினார் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.**

அகந்தையால் செய்வதறியாது மிடுக்காய் உலகைத் துயரப்படுத்திய முப்புரத்து அசுரரும் வாழ்ந்த மூன்று மதில்களும மேரு என்னும் வில் மலையால் எய்திட நெருப்புச் சூழ்ந்து வெந்து அழிந்து சாம்பராகிட அம் மேருமலையை வில்லாகவளைத்த பெருமான் உறையும் தேவர்கள் வந்து வணங்கும் பழமையால் கோயிலாவதும் பங்குடனே நான்குவேதங்கள் ஆறு அங்கங்கள் இன்னும் பல கலைகளைக் கற்று தம்மிடத்துப் பதியப் பண்ணிய அந்தணர்கள்வாழும் திருஆக்கூரில் தான்தோன்றிமாடம் என்னும் கோயிலாகும்.

அங்கிருந்த அந்தணர்கள் யாவரும் நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் பல கலைகளையும் நன்கு பலமுறை கற்றுத் தம்மிடத்துத் தங்கிடச் செய்தவர் என்றதால் நான்மறையோடு ஆறுஅங்கம் தாங்கினார் என்கின்றார். அதாவது அங்கிருந்த அந்தணர் யாவரும் ஓர் கல்விக்களஞ்சியம் போல இருந்தனர் என்றவாறு. அவர்கள் பிறரிடம் ஏதும் ஓடிச் சென்று கேட்கவேண்டிய நிலை இருந்திருக்கவில்லை.

அடுத்து வேதம் அங்கம் அதன் தொடர்பாக கலைகள் பலவும் தங்கியிருக்கப் பெறுவதால் நெறி உடையவராய் அனைவரும் இருந்தனர் என்பது பொருளாகும்.

குறைந்த கல்வி அறிவுடைய அந்தணர்களே நெறி குழம்புவர், நிலை கலங்குவர். நிறைந்த கல்வியறிவுடையவர் கலங்கார். நிறைகுடம் தழும்பாது, குறைக்குடம் தழும்பும். ஆதலால் கலைகள் தாங்கினார் என்றார். கல்வியின் நலம் இருக்கும்பொழுது பொய் ஏமாற்றம் வியாபாரம் முதல பல தந்திரச்செயல ஏற்படாது நன்மை இருக்கவைப்பதுதான் கல்வியின பயன்!

**கன்னெடிய குன்றெடுத்தான் தோளடரக் காலூன்றி<br>இன்னருளா லாட்கொண்ட எம்பெருமான் தொல்கோவில்<br>பொன்னடிக்கே நாடோறும் பூவோடு நீர்சுமக்கும்<br>தன்னடியார் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.**

கல்லாகும் நெடிய கைலைமலையைத் தோளால் தூக்கி எடுத்த இராவணன் அம்மலைக்கீழ் அகப்பட்டு நெரியத் திருப்பாதம் ஊன்றி அவனையும் இனிய அருளால் ஆட்கொண்டருளிய எம்பெருமானது பழமையான கோயில்; அவரது பொன் அழகான திருவடிக்கே நீராட்டி மலர்சூட்டி வணங்கும்படி நாள்தோறும் பூவும் நீரும் சுமந்து செல்கின்ற எம்பெருமான் அடியார்வாழும் திருஆக்கூர் என்னும் பதியில் தான்தோன்றிமாடம் என்னும் தலமாகும்.

எம்பிரான் ஞானசம்பந்தர்காலத்து ஒவ்வொருவரும் எந்த ஆலயத்துள்ள மூர்த்தியையும் பூவும் நீரும் சுமந்துசென்று நீராட்டிப் பூச்சூட்டி வழிபடும் முறை இருந்தது. இன்று இந்நிலை மாறி வழிபாடு பணம்பறிப்பதாக இருக்கிறது. எஜமான் என்றும், அர்ச்சகர் என்றும் இப்படி நம் நாட்டில் பல சமயவியாபாரிகள் தோன்றி உள்ளனர். இவர்களால் நம் சமயநெறி மிகவும் கீழ்மைப்பட்டு இவர்களுடைய பண வாஞ்சையால் பொய்மைக்கே இவர் ஆளாகிவிட்டனர். இந்த தான்தோன்றி மாடத்தில் மட்டும் எல்லாரும் வழிபடக்கூடியமுறை இருந்தது மட்டுமன்றி நெடுங்களம் திருப்பருப்பதம் முதலிய கோயில்களிலும் இந்தமுறை உள்ளதாகத் தெரியவருகிறது.

**நன்மையான் நாரணனும் நான்முகனுங் காண்பரிய<br>தொன்மையான் தோற்றங்கே டில்லாதான் தொல்கோயில்<br>இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னு தீந்துவக்கும்<br>தன்மையார் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே.**

நன்மையுடையவனான நாரயணக் கடவுளும் நான்கு முகமுடைய பிரமனும் காண்டற்கரிய மிகத் தொன்மையானவன் தோற்றம் கேடு இல்லாதவன் அவனுடைய பழமையான கோயில். ஒருவர் தன்னிடத்து பொருளிலாதபோது பொருள் வேண்டிச் சென்று இரந்தால் அவ்வாறு இரந்தார்க்கு இல்லையென்று சொல்லாது தன்னிடத்துள்ள பொருளை கொடுத்து அவ்வாறு கொடுத்தலில பெரிதும் மகிழ்கின்ற தன்மையுடைய வேளாளர்கள் வாழ்கின்ற திருஆக்கூரில் தான் தோன்றியாடம் என்பதாகும்.

இத்திருப்பதிகம் உயர்கதிக்கு நம்மை இட்டுச் செல்லும் முதற்படியாக விளங்குகிறது. வேளாளர் என்பவர் வித்தின் மூலம் உலகை வழர்ப்பவர். விதைத்த வித்து முளைத்து பயன் தருகிறது. விதைத்தல் வேளாளரின் செயலே அன்றி அப்பால் அவை முழைத்து பலன் தரும் நிலையாவும் திருவருள் வசத்தால் அமைந்தது. ஆகையினால் இத்தி[illegible] வந்த [illegible] வைப்பது உண்மை உணர்ந்தார் அனைவரதும் கடனுதும் இதைத்தான் தருமம் என்று சொல்லுவது தவறான வழி (கூடக் கொம்மிஷன்கொடுத்து அல்லது களவாக எடுத்துச்சென்று) அங்குள்ள சமய வியாபாரிகளான அந்தணர் அல்லது சாமிகட்குத் தானம் செய்வதில் ஏதும் பயனில்லை.

உண்மைபேசித் தருமத்தைக் கரவிலாது புரிந்து தன்செயலால் ஆவதொன்றில்லை எனத் தெளிந்து தான் வேறு தன்னுடல்வேறு என உணரும் ஞான ஆசார சிரத்தையுடன் வாழ்வார்கள் காசுக்குப் போயுமொன்றுதான்; கதிர்காமம் போயுமொன்றுதான்; வீட்டிலிருந்து வணங்குவதும் ஒன்றுதான் என்பதை மேலே தரப்பட்ட யோகசுவாமியின் பாடலின் பொருள் தெளிவாக்குகிறது.

# யோகசுவாமிகளது அடி என்னை உய்யவைத்தது

கே. கே. எஸ் வீதியைச் சேர்ந்த ஒரு பிரபல பிடவை வியாபாரி என்னை ஒருநாள் சந்தித்தார். அவர் வயசால் முதிர்ந்தவர். அவர் என்னை நோக்கி யோகசுவாமி பற்றி ஒரு கதை சொன்னார். தனக்கு அப்பொழுது 14 வயது இருக்கும். தான் ஒரு கடையில் விற்பனைப் பையனாக இருந்தவன். தான் இருந்த கடைக்கு முன்பாக உள்ள புத்தகசாலையில் யோகசுவாமியும் அவரது அடியார் கூட்டமும் கூடியிருந்து அங்கு புராணம் படிப்பார்கள் புராணம் படித்து முடிந்ததும் எல்லோருக்கும் கடலை கொடுப்பதும். நானும் போய்க் கடலைவாங்குவேன். சுவாமியைக் கும்பிடுவேன.

இது இப்படி இருக்க ஒரு நாள் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள தேனீர்க்கடையில் காலைச்சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். முன்னெல்லாம் உங்களுக்கு தெரியும் கதிரை மேசை கடைகளில் இல்லை. வாங்குதான் வைக்கப்பட்டிருக்கும். நல்ல அரிசிமாத் தோசை வாங்கி அந்த வாங்கில் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்க அக்கடைக்காரர் பணி நிறைய பால்க் கோப்பி கொண்டுவந்து எனக்கு முன்னால் வைத்தார். நான் குனிந்திருந்து தோசை சாப்பிட்டுக்கொண்டிருக்க யாரோ வந்து என்முதுகில் மளாரென ஒரு அடி தந்தார். நான் திகைத்துப்போய் திரும்பப் பார்த்தேன். யோகசுவாமி நிற்கிறார். நான் ஒன்றும் பேச முடியாது எழுந்து நின்றேன். சுவாமி அப்பொழுது எனக்கு முன் வைக்கப்பட்டிருந்த பாற்கோப்பியை எடுத்து அருந்தினர். நான ஒன்றுமே பேசாமல் நின்றேன். அந்த அடி என்னை முற்றாலும் திகைக்க வைத்துவிட்டது. சுவாமி கோப்பியை அரைவாசி குடித்துவிட்டுப் போய்விட்டார். நான் எஞ்சிய பாற்கோப்பியையும் தோசையையும் சாப்பிட்டுவிட்டு அவ்விடம் விட்டு நகர்ந்து கடைக்குச்சென்று எனது உறவினர்களிடம் யோகசுவாமி என்க்கு அடித்துப் போட்டார் எனக் கூறினேன். அதற்கு அவர்கள் என்னை நோக்கி "எடே உனக்கு இது கிடைச்சுக் கிடக்குதோ" நீ ஒரு புண்ணியவான் இருந்துபார் நீ இனி நல்லாய் இருப்பாய் என்றனர்.

இன்று எனக்கு ஒரு குறையுமில்லை. எனக்கு ஆறுபிள்ளைகள். ஆறுபேரும் தனித்தனி வீடு கட்டி எல்லோரும் நல்லாய் இருக்கிறார்கள். ஏதோ நானறிந்த அளவில் கோயில் திருப்பணி வேலைகட்கு நன்கு உதவி செய்பவன். ஒரு காலமும் தீங்குக்குப் போகமாட்டேன். அந்த அடிதான் கடையில் ஒரு விற்பனையாளனாக இருந்த என்னை இந்நிலைக்கு கொண்டுவந்தது எனக் கூறினார் அந்த அன்பர்.

# மனிதன் புடவைக்கடையும் வைப்பானா?

## என்றார் யோகசுவாமி

ஸ்ரீ லங்கா புத்தகசாலை முதல்வர் யோகசுவாமிகள் பற்றிய ஒரு அருள் வரலாற்றை நம்மிடம் கீழுள்ளவாறு தெரிவித்தார்.

1948ம் ஆண்டளவில் எனது புத்தகசாலையால் பெரும் நட்டத்திற்குள்ளானேன். அப்படி இருக்கும் காலத்தில் எனது மனம் இப்புத்தகக் கடையை விடுத்து வேறுவிதமான வியாபாரத்தில் ஈடுபட எண்ணியது. நான் யோகசுவாமியின் ஆசி இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை. அதனாலே இப்படி வேறு வியாபாரம் எது செய்யலாம் என்று சிந்தித்த போது புத்தகசாலைக் கடையை விடுத்து புடவைக் கடை வைக்கலாம் என எண்ணினேன். ஏனென்றால் அந்தநேரத்தில் புடவைக் கடைக்காரர் நல்ல இலாபம் பெற்றிருந்தனர். யோகசுவாமி அடிக்கடி எனது காரில் பிரயாணம் செய்வது வழக்கம். இப்படி ஒருநாள் சுவாமி என்னுடன் கூடவரும்போது அவரிடம் புத்தகசாலையை விடப்போறன் சாமி. புடவைக் கடையை வைக்கலாமென நினைக்கிறேன் புத்தகசாலையால் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது எனறேன். அப்பொழுது சுவாமி என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றல் இரப்பார்க்கு கொடுப்பதும் கொடுத்தேன் என மகிழ்வதும் செயற்கரிய செயலாகும். இந்த அருள் நிலையில் அன்றிருந்த வேளாளர் இருந்தார்கள் என்கின்ற போது இன்று வேண்டிய கடன் கொடுக்காத வித்துவான்கள் பலர் ஊருக்கு உபதேசம் செய்கின்றார்கள். அப்போ தமிழர் நாகரீகம் என்பது யாது? இன்னும் வேளாளர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகமே எழுகின்றது. இவையெல்லாம் இன்மையால் சென்றிரப்பவர்க்கு கொடுக்கும் பழக்கம் அற்றுப் புகழுக்காகவே கொடை நடைபெறுகிறது.

இரப்பதற்கும் ஒரு இலக்கணம் சொல்கிறார். இரப்பதென்றால் சோம்பேறித்தனமாக இருந்துவிட்டு சாப்பாட்டிற்கு போவதல்ல. சோம்பலின்றி முயற்சி செய்யவேண்டும். அந்த சோம்பலில்லாத முயற்சி பலிக்காது வறுமை ஏற்படும் போது தான் இரத்தல் செய்யவேண்டும். இது தமிழ் மரபு. இன்று இரப்பதை சிலர் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆனதன்மையினாலே இத்தகைய இரத்தல் பெருமைக்குரியதல்ல. துன்பம் வந்தாலும் அதாவது செய்த முயற்சி பலன் தராது தோல்வி அடைந்தால் இரத்தலே உண்மையாகும். அவ்வாறானவர்க்கு கொடுத்தலே புண்ணியம். காசு வைத்துக்கொண்டு இரப்பார்க்கு கொடுத்தல் பாவம் என்பது உட்பொருளாகும். இதை நம் சைவமக்கள் உணரவேண்டும். வாழமுடியாது வறியவர்க்கு பொருள்கொடுத்து வாழப்பண்ணுதலே உண்மையான சிவதொண்டு. வாழக்கூடியவர்க்கு இன்னமும் கொடுத்தல் பாவம் எனறதால் உண்மையாய்ச் சென்றிரந்தார்க்கு இல்லையென்னது ஈர்ந்துவக்கும் தன்மையார் என்றார்.

கொடுக்கும் போது கருகிய மனதுடன் கொடுத்தல் கொடுத்தபின் கவலைப்படுதல் பொருத்தமல்ல. கொடையில் மகிழவேண்டும், இது எங்கள் நாட்டிலே மீள இருந்த மரபு இன்று குன்றியதைக்கண்டு வருந்தவேண்டியுள்ளது எம் நாட்டில் கொடையில்லை என்று சொல்லவில்லை. இல்லாதவர்க்குக் கொடுக்கும் பழக்கம் அருகிவிட்டது. இல்லாதவர்க்கு கொடுத்து தன்னைப்போல் அவரையும் வாழப்பண்ணும் மனப்பாங்கு கடவுள்த் தன்மை. இந்த நிலையில் இருந்துதான் திருவருள் வசத்தால் மேலே போகலாம். இதை நன்றாக உணரவேண்டும்.

## நாமருவு புன்மை நவிற்றச் சமண்தேரர்
## பூமருவு கொன்றையினுன் புக்கமருந் தொல்கோயில்
## சேல்மருவு பங்கயத்துச் செங்கழுநீர் பைங்குவளை
## தாமருவும் ஆக்கூரில் தான்றேன்றி மாடமே.

நாவில் எந்த நேரமும் இயல்பில் குடிகொண்ட பெருமை வஞ்சகத்தின் சொற்களை சமணரும் புத்தரும் சொல்ல அதனால் அறியப்படாது கொன்றைப்பூமருவிய செஞ்சடை உடையவர் சென்று தங்கியிருக்கும் மகப் பழமையான கோயில். சேல் மீன்கள் தங்கிவாழும் பசிய தடாகத்து செங்கழுநீர்ப்பூவும் பசிய கருங்குவளை மலரும் பொருந்திக் காணப்படும் திருஆக்கூரில் காணப்படும் தான் தோன்றி மாடம் என்னும் கோயிலாகும்.

சமணரும் புத்தரும் எப்போதும் சிறுமைக்குரிய வார்த்தையையே பேசுவார்கள். பரந்த நோக்கமல்லாதவர்கள். கொலை செய்யோம் என்று நூலில் கூறிவிட்டு வஞ்சனையால் கொலை செய்ய எத்தனிப்பவர்கள். அந்தவஞ்சனையின் சொற்களும் பொறாமையின் சொற்களும் அவர்கள் நாவிலே பொருந்துவன. ஆகையினல் நாமருவு புன்மை நவிற்ற என்றார். எவருடைய நாவிலும் சிறுமைக்குரிய சொற்கள் வரக்கூடாது. எம்பெருமக்களான சைவமக்களில் அவை ஒருபோதும் இருந்ததில்லை. ஆனல் இன்று நம் சமயத்தை வியாபாரமாக்கிக் கொண்ட எல்லாச் சைவர் எனப்படுவாரும் அவர் நாவில் வரும் சொற்கள் புத்தா சமணரிலும் மோசமாய் இருக்கின்றன. அறிவாளியான எந்தச் சைவனும் இதையுணருவான். இல்லாதொழிந்தார் இன்னமும் தீங்கே செய்யப் போகிறார்கள். இன்று எம் சைவரது நிலை சமணர் புரிந்ததிலும் மிக மோசமாக வந்துளது. உண்மை உணர விரும்புவார் இதை அறியவேண்டும். தன்னையும் ஏமாற்றி பிறரையும் ஏமாற்றுவார் இனியாவது சிறுமை பேசாது நன்மைபெறுவாரென நம்புகிறோம்.

## ஆடல் அமர்ந்தானை ஆக்கூரில் தான்றேன்றி
## மாடம் அமர்ந்தானை மாடஞ்சேர் தண்காழி
## நாடற்கரியசீர் ஞானசம் பந்தன்சொல்
## பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

உலகம் இயங்க திருநடனம் கொண்டவனை திருஆக்கூர் என்னும் பதியில் தான்தோன்றி மாடம் என்னும் கோயிலில் அமர்ந்தவனை பெருமாடங்கள் நிரம்பிய குளிர்ந்த சீகாழிப் பதியில எவராலும் நாடற்கரிய சிறந்த சீருடைய ஞானசம்பந்தர் சொல்லிய சொல்லாகும். பாடல் இப்பத்தினையும் பாடவல்லார்க்கு பாவம் இல்லை.

உலகம் இயங்கவே திருக்கூத்து நடக்கிறது எல்லோர்க்கும் பொதுவானதே திருக்கூத்து. அவனது உலகம் அவனருளால் யாவும் ஆடலில் இயங்குகின்றது. இத்திருக்கூத்து காண்டற்கரியது. ஆகவே ஆடல் அமர்ந்தானை என்றார். அந்தஆடலைப்புரிபவனே திருவாலங்காட்டு மாடத்தில் இருப்பவர் என்றதால் ஆக்கூரில் தான்தோன்றி மாடத்தில் அமர்ந்தார் என்றார்.

எம்பெருமான் திருஞானம்பந்தருடைய ஞான ஆசாரநிலை அதனல் அவர் பெற்றுக்கொண்ட சீர் வேறுயாரும் உணரமுடியாது அவருவுடைய சிந்தைக்கும் அது எட்டொணுது என்றமையினுல் நாடற்கரிய சீர் ஞானசம்பந்தா என்றார். இதற்கு எங்களால் இலக்கணம் வகுக்கமுடியாது. சீர் என்றது அருளின் சிறப்பு ஒழுக்கநேர்மை என்பதாகும். இதை யாராலு விளங்கமுடியும். இதனைச் சைவமக்கள் கொஞ்சமாவது உணருங்கள். இன்று தம்மைச் சாமியென நாமம் சூடிக்கொள்ளும் பேதையர் உணரட்டும். நாம் இதற்கு மிஞ்சி ஏதும் சொல்ல வரவில்ல. எமது சைவ மடங்கள் உணரவேண்டும். சைவ மடங்கள் மட்டுமன்றி ஏனைய சைவஸ்தாபனங்களும் உணரவேண்டும். சைவம் மக்களின் வசதிக்காக உள்ளதல்ல. மக்கள் சைவநெறிக்கு உயரவேண்டும்; இதுதான் சைவம். ஏனைய சமயங்கள் மக்கள வசதியை முன்வைத்து நெறி சொல்லுவார். ஆனல் சைவம் ஒன்றுதான் நெறியைக்காட்டி மக்களை அங்கு உயரும்படிகேட்கிறது. ஆகையினலே நாடற்கரிய சீர் என்கின்றார். இதனுலே சைவ நெறியின் மகிமையை நன்றாக மக்கள் உணரவேண்டும். சைவநெறிக்கு சட்டம் இயற்ற முடியாது. அது உணர்வினுல் உணர்ந்துயர்ந்து மேற்போவதே சைவம்.

இப்பாடலை பாடவல்லார்க்கு பாவம் இல்லை என்பதும் சுவாமிகள் உணர்த்திய உண்மைகளை உணர்வார்க்கு பாவம் வராது என்பதும் உண்மைதானே.

நோக்கி புடவைக்கடையும் மனிதன் வைப்பதுண்டோ? புத்தகக் கடையால் எவ்வளவு சிறப்பு. படிச்ச மனிதன் வருவான்; நீ அவர்களின் கல்வி அறிவுக்கான நூல்களைக் கொடுப்பது எவ்வளவு புண்ணியமென நினைக்கவில்லையே! நன்கில்லா விட்டாலும் பின்னடிக்குத் துன்பத்தைத் தேடித் தராது. ஆனல் புடவைக் கடையால் வரக்கூடிய ஆதாயம் பிழையான வழியில் அவனை இழுத்து விடுவதல்லாமல் துபரத்தையும் வருவித்துவிடும். புடவைக் கடை வைத்துப் பலர் தம்மைப் பழுதாக்கிப்போட்டார் என்றார். நான் எனது எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன்.

இப்படியிருக்க சிலநாட்களின்பின் யோக சுவாமி ஒருநாள் என்னிடம் வந்து தனக்கு ஒரு 50 ரூபா வேணும் என்றார். உண்மையில் அன்றைக்கு என்னிடம் காசு இல்லை, நான் சொன்னேன் சுவாமி என்னிடம் இப்பொழுது தருவதற்கு காசில்லை நான் பின்நேரம் உங்களுக்கு 50 ரூபா கொண்டுவந்து தாறன் என்றேன். ஆனல் பின்நேரமும் கொடுக்க முடியவில்லை அவ்வளவு வரட்சியான காலம். அதன்பின் இரண்டு மூன்று நாட்கழித்து 50 ரூபா சுவாமிக்கு கொடுக்கக் கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஞாயிற்றுக்கிழமையென நினைக்கிறேன் சாயந்தரம் யோக சுவாமியின் ஆச்சிரமத்திற்கு 50 ரூபாவை எடுத்துக்கொண்டு போய் சுவாமியிடம் கொடுத்தேன். சுவாமி அதை வாங்கிக்கொண்டு வா என்று கூறி புறப்பட்டார், நான் அவரைப் பின் தொடர்ந்தேன். சுவாமி கொழும்புத்துறை துண்டிச் சுடலைக்குச் சென்றார். அங்கு சுவாமி காசைக் கையில் வைத்தபடி சிறிதுநேரம் மௌனமாக இருந்தார்

பின்பு என்னைநோக்கி இந்த 50 ரூபாவையும் வைத்துக்கொள் என்றார். இது என்னுடைய காசு. நான் கேட்கிறநேரம் தரவேண்டும்; இது 50,000 ரூபா ஆனதும் காசுக்கு வருவேன் என்றார். நான் 50 ரூபாவையும் பெற்றுக்கொண்டு சென்றேன.

அந்தப்பணத்தை புத்தகசாலையில் முதலீடு செய்ததிலிருந்து என் வியாபாரத்தில் ஒரு மாற்றம் நிலவியது. வருடாவருடம் வருவாய் அதிகரித்தது. 50 ரூபா 50,000 ரூபாவாக மாறிய அன்று சுவாமி என்னிடம் வந்து எங்கே என்காசு எனக்கேட்டார். நான 50 ரூபாவையும் கொடுத்தேன், என்னைத் துயரிலிருந்து கை தூக்கிவிட்டது யோகசுவமியின அருள் நிலையாகும் என்றார்.

## தன் தொழிலை விட்டவன்
## சாதியிற் கெட்டவன்
## என்றார் யோகசுவாமி

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கடமையாற்றும் அந்தணர் ஒருவர் ஒருநாள் என்னை சந்தித்தார். நமக்கு முன்பே அறிமுகமானவராதலால் அவரிடம் ஒரு சந்திரதீபப் பத்திரிகையைக் கொடுத்து ஐயா இப்பத்திரிகையை வாசித்துப் பாருங்கள் என்றேன். இப்படி அவரிடம் கொடுத்தபின் அவரை நோக்கி ஐயா பலரும் இப் பத்திரிகையை அந்தணர்க்கு மாறானதெனச் சொல்லக்கூடும். ஆனல் உண்மை அப்படியல்ல இது அந்தணர் குலம் மேலோங்கப் பணிபுரிவதாகும். அந்தணர் தமக்குரிய வைதிக நெறிகளை நீக்கி மிலேச்ச நாகரீகமுடையவராக மாறுகின்றனர். இதை நீளவிட்டால் சைவசமயம் வெறு சமயமாக மாறிவிடும் என்று கூற, அந்தணர் என்னைநோக்கி ஓம் நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஒரு நாள் நான் யோகசுவாமியைக் காணச் சென்றபோது சுவாமி என்னை நோக்கி "தன் தொழிலைக் கைவிட்டவன் சாதியில் கெட்டவன்" என்றார். அதன் உண்மையை அனுபவத்தில் காணமுடிகிறது. அந்தணர்குலம் தம் குலத்தொழிலை நழுவவிட்டு வேறு பல செயல்களையும் செய்து தங்களைத் தாங்களே பழுதாக்கிக் கொள்வது வருத்தத்திற்குரிய காரியம் எனக் கூறினர்.

# அன்னதானம் செய்யும் அறம் உணர்வார் கன்னம் காதுவெடிக்கக் கதறி மறம் ஏன் புரிகின்றர்

## அள்ளிவீசும் காசுக்காக மண்டலாபிஷேகத்தை ஐம்பதுநாள்வரை நீடிக்கலாமா?

செவிக்கினிய இல்லாத போது சற்று வயிற்றுக்கும் ஈயப்படும் என்கிறார் வள்ளுவர்.

இக்குறளின் தாற்பரியத்தை உணர்ந்து கொண்டார் கொக்குவில் மேற்கில் குடிகொண்டிருக்கும் ஐயனார் கோவில் என அழைக்கப்படும் பிள்ளையார் கோயிலின் நிர்வாகத்தை சேர்ந்த எவரேனும் ஒருவர் இருப்பாரோ என்பது தெரியாது. சமீப நாட்களின்முன் ஐயனார் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். கும்பாபிஷேக யந்திர பூசைக்கு முன்னமேயே ஒலிபெருக்கி ஓலமிடத் தொடங்கி விட்டது. கும்பாபிஷேகத்தின் போது நடைபெற்ற பிரம்ம பிரதிட்டை எனும் தூயகிரியையும் ஒலிபெருக்கியில் ஒலிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஸ்கூட்டர் என்னும் இரண்டு சில்லு வாகனத்தில் வல்லவரும் குருக்கள்மாரும் அவரது சகாக்களும் தமது கட்டைக் குரலையும் நெட்டைக் குரலாக மாற்ற முற்பட்டு ஒலிபெருக்கியில் கதறினர்.

தொடர்ந்து 45 நாட்கள் அபிஷேகம் நடைபெற்று வரும்போது ஒவ்வொரு நாளும் அன்னதானம் அழகாக நடைபெற்றது. உண்மையில் அன்னதானம் நடத்தியது பாராட்டத்தக்கதாயினும் அன்னம் உண்டோர் தாம் உண்டபின் இலைகளைக் கோயில் முகப்பிலும் அருகிலும் பரப்பிக் கிடந்ததைக் கண்டு பரிதவித்த சந்திரதீபம் இவ்வாலயத்தை அன்னம் உண்டோர்தானும் மதிக்கவில்லையே என்று வருந்துகிறது. கோயில் முன் நிறுவப்பட்டுள்ள கடலைக்கடையும் அசிங்கத்தை அள்ளிவீசி ஆலயத்தை அசிங்கப்படுத்தியது. இவற்றிற்கு மத்தியில் பல இளைஞர்கள் கூடிநின்று வெறுங் கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி வேடிக்கையாகச் சிரிப்பதும் சிந்தனைக்குச் சீற்றத்தை உண்டுபண்ணியது.

மாலையானதும் கோயிலில் முத்தமிழ் முழக்கம் இட்டது. மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தபடியே நின்றது. அத்துடன் தற்கால இசைத் தமிழாகிய சொல்லிசை மெல்லிசை பொப்பிசைகளும் போட்டிபோட்டுக் குழறித்தள்ளின. கேட்கவேசகிக்காத கேளிக்கைப் பாடல்கள் கோயில் பேரால் ஒலிபெருக்கிமூலம் கதறின. தனக்குமொரு இடம் கிடையாதா என்று தவித்த பிரசங்கியாருக்குத் தக்கதருணத்தில் மேடையமைத்துக் கொடுக்க அவர் கோயில் முகப்பில் நின்று ஒலிபெருக்கியில் கதறிய பிரசங்கத்தின் மகிமையை அதிக நேரமாக நித்திரையின்றித் தவித்த ஓர் வயோதிபர் பாரிசவாத நோயுற்றிருப்பவர் என்காதில் கேட்கும்படியாக "ஐயோ இவர்கள் என்ன ஒவ்வொரு நாளும் ஒப்பாரி வைக்கிறார்கள்" என்று கூறியதை ஒலிபெருக்கியால் ஏற்படும் கொடுமை பற்றி மக்களுக்கு உரைவைக்கின்றும்.

இந்த ஒலிபெருக்கியில் அலறும் செயல உண்மையாகச் சிவபூசை புரியும் ஒரு பெரும் சிறப்பை தப்பிறவியில் பெற்றுக்கொண்ட ஓர் புலவர் பரம்பரையின் மகனுர்க்கு வரவேண்டிய அவசியமில்லை.

தற்புகழ்ச்சியும் தற்பெருமையும் எவ்வளவு தீங்கான நிலையை உருவக்கும் என்பதை இன்னமும் அறியால் உயர்ந்த புலவர் பரமபரை நினைக்க வில்லையே என்பதை நோக்கச் சந்திர தீபம் வேதனைப்படுகின்றது.

வில்இசை ஒன்று அக்கோவிலில் ஒருநாள் நடைபெற்றதை நோக்கின் அநந்சழ்சசி மது அருந்தும் கள்ளுத் தவறணையில் கண்டபடி பிதற்றி ஆடிப்பாடும் நிலையை ஒப்ப இருந்தது, ஒரு புனிதமான கருமத்தை செய்பவர் இத்தகைய சிறுமைகளை ஏன் இடைப்புகுத்துகின்றார் தெரியவில்லை.

முன்னாள் மேல்மன்ற உறுப்பினராக இருந்தவரும் இப்பகுதி மக்களின் ஓர் தலைமகனுக்க் கருதப்படுபவருமான ஒருவர் இத்தகைய சிறுமைகள் நடைபெற அது ஆலயத்திற்குப் பொருத்தமற்றது எனத் தெரிவியாத காரணம் புரியவில்லை!

அந்த கும்பாபிஷேகத்தில் அந்தணர் நடந்துகொண்ட முறைகள் அவர்கள் வேதநெறிகளை முற்றிலும் அழித்தொழிக்கும் ஓர் வேதகுலத் துரோகிகளாகவே காணப்பட்டார். கும்பாபிஷேகத்தில் தங்களுக்குக் காசுகிடைத்த தொகைபற்றிப் பெருமையாக மாவிட்டபுரம் மடப்பள்ளி ஐயரின் மகன் மகாதேவ சாஸ்திரிகள் இன்னுமொரு குருக்களுக்குக் கூறினாராம்,

தனக்குக் கும்பாபிஷேகத்தில் 500 ரூபாவும், உருமபராய கருணாகரப் பிள்ளையார்கோவில் சபாரத்தினக் குருக்களுக்கு 1000 ரூபா தெட்சணையாகக் கிடைத்ததாகவும் கூறினாராம். இதில் என்ன பெருமை? இருவரும் வைத்திருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு 4 நாள் சரிவர ஓடுவதற்கு பெற்றால் செலவிறகுப் பற்றுது,

எல்லா இடமும் கும்பாபிஷேகதினத்தைத் தொடர்ந்து நித்திய அபிஷேகம் நடைபெற்று 45வது நாள மண்டலாபிஷேகம் நடைபெறும். ஒரு மண்டலத்தை 45 நாளாகக் கொள்வர். ஆனல் இக்கோயிலில் மண்டலாபிஷேகம் 50 வது நாளாகக் கொள்ளப்பட்டது, 48 வது நாளன்று சங்காபிஷேகமும் 49 வது நாளன்று சங்காபிஷேகம; 50 வது நாளன்று அன்னாபிஷேகமும் நடைபெறறன. சங்காபிசேகத்தில் யாகசாலைக்கு மேற்கட்டியாக நாலுமுழவேட்டி மட்டும் கட்டி இருந்தாாகளாம். அந்த யாகசாலையின அமைப்பு ஓர் தெய்வத்தன்மையானது என்பதைப் பிரதமகுருக்கள் உணரத் தவறிவிட்டாராம், அங்கு கிரியைகள் முறையாக நடைபெறவில்லையென அதன அவதானித்த குருக்கள சந்திரதீபத்திடம் கவலைதெரிவித்துக்கொண்டார்.

பறிபோய்விடும் என்பதற்காக பூசகரைத் தாக்குகிறார்கள். ஒழுக்கநெறி தவறுத பூசகர் என்றால் இலங்கையில் இவர் ஒருவர் தான். நீங்கள் வந்து பார்த்தால் தெரியும். தயவு செய்து உங்கள் பத்திரிகையில் பிரசுரிந்து விடுங்கள் திருக்கேதீஸ்வர காரியதரிசி அறியட்டும். கோயில் காணிகளை தங்களுக்கு வேண்டிய ஆக்களுக்கு கொடுத்து பூர்வீகமாக குத்தகைக்கு எழுதி பணத்தை வாங்கி அபகரித்தார்கள். கோயிலுக்கு கொடுக்கும் வெள்ளிவேல் தங்க ஆபரணங்கள் இவைகளை விற்று தனது மருமக்களுக்கு சீதனம் கொடுத்தான் இந்தக் கிழட்டுமனேஜர் (ரத்தினம்). கோயில் விளக்குகளை விற்று தனது வீட்டிற்கு பொருட்கள் சேமிப்பான். அப்பேற்பட்ட நிர்வாகம். இந்த சீர்கேட்டை ஊர் அறிய பிரசுரிக்குமாறு வேண்டி விடைபெறுகிறேன்.

இங்கனம்
அடியேன்
வி. ஜெகநாதன்

# காரைநகர் சிவன்கோவில் நடேசருக்கு கடுதாசிமாலை சாத்தினர்

## கடவுள்பேரில் வியாபாரம் என்றுதான் நீங்கிடுமோ? தொண்டு என்று நிலைபெறுமோ?

உ
சிவமயம்

வி. பி. பாலநேசன்
மாப்பாணவூரி
காரைநகர்

ஆசிரியர், சந்திர தீபம்

ஐயா,

தங்கள் பத்திரிகை கடந்த காலங்களில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டு வருகிறது என்பதை நான் அறிவேன். தங்கள் சேவை தொடர்ந்து நடைபெற வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன். மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவரும் தங்கள் பத்திரிகை ஆலயங்களில் அந்தணர்களின் அட்டகாசச் செயல்களையும், வெளியில அவர்கள் நடந்துகொள்ளும்விதம் பற்றியும், அவற்றைக் கண்டித்தும் அப்பட்டமான முறையில் வெளிப்படுத்திவருவதும வரவேற்கத் தக்கதாகும். அதுபோல நானும் ஒரு கட்டுரையைத் தங்கள் பத்திரிகைக்கு அனுப்புகிறேன். அதை எதாவதும் தங்கள் இதழ்களில் பிரசுரிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன.

கடந்த 20-6-80 இல் ஈழத்துச் சிதம்பரமென அழைக்கப்படும காரைநகர் சிவன் கோவிலில் நடைபெற்ற ஆனி உத்தர நன்னாளில் அன்று காலை நடைபெற்ற அபிஷேகத்தின்பின் அன்றுமாலை ஸ்ரீசிவகாமி சமேத சுந்தரேஸ்வரப் பெருமான எழுந்தருளச்செய்து வீதி உலாவருவது வருடா வருடம நடைபெற்று வருகிறது. இம்முறையும் அவ்வாறே நடைபெற்றது.

வழக்கம் போல அன்றும் விழா நடைபெற்றது. அன்று காலை அபிடேகம் 5 மணியளவில் ஆரம்பமாகி 6.30 மணியளவில் முடிவடைந்தது. மாலையில் மூன்று மணியளவில் வீதி உலா வரவேண்டிய இறைவனையும் இறைவியையும் அலங்கரிக்கும் பூசாரியார் மணி மூன்றளவில் மிதிவண்டியில் மாலைகள் சகிதம் வந்து சேர்ந்தார். அதுவரையில் வெளியில் நின்ற நானும் எனது நண்பனும் இவரைக் கண்டதும சபையில் போயிருந்தோம்.

அப்பொழுது அங்கேவந்த ஆதினகர்த்தா "ஏன் அப்பா இவ்வளவு நேரம்" என்று கேட்டதற்கு அவர் ஏதோ சாக்குப்போக்குகள் சொல்லிவிட்டு வேலையைத் தொடர்ந்தார், பூசாரியார் தன் பூக்கூடையில் இருந்த மாலைகளை எடுத்து வைத்தார். அப்பொழுது காகிதமாலைகளும் காணப்பட்டன. அவற்றினல் இறைவனை அலங்கரித்தார். இதனை எனது நண்பர் எனக்குக் காட்டினர். நாங்கள் இதனைக்குறித்து மிகவும் மனம் வருந்தினோம்.

அன்று மாலை உற்சவம் முடிந்த பின்னர் நானும் எனது நண்பர்களும் பூசரியாரிடம் சென்று அண்ணே! இந்தக் கடுதாசி மாலையைத்தாறிங்களா என்று கேட்டபோது அதற்கு அவர் அதை யாரிடமோ இரவல் வாங்கி வந்ததாகவும் என்னும் எத்தனையோ கோவில்களில் அலங்கக்க தேவையென மறுத்துவிட்டார். எங்களுக்கு தேவையென்றல் இனிச்செய்துதாறேன் என்று தட்டிக்கழித்துவிட்டார். இது நியாயமா? இறைவனுக்குதான் தெரியும்.

ஆனல் இத்தனையும் ஆதினகர்த்தா திரு. அ ஆண்டிஐயாவுக்குத் தெரியுமா என்று ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

எனவே இதைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
வி. பி. பாலநேசன்

# பொலிகண்டி கந்தவன நிர்வாகம் இப்படியா நடப்பது?

## கந்தபுராணம் ஓதியும் மந்தபுத்தி நீங்கார்தோ?

வி. ஜெகநாதன்,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

அன்பார்ந்த சந்திரதீபம் பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா!

தங்கள் வெளியீடான சந்திரதீபம் பத்திரிகையை பொலிகண்டி கந்தவன ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ வைத்தியநாதக்குருக்கள் வீட்டிற்கு சென்ற பொழுது குருக்கள் சொன்னார் அவர் சொல்லிய வார்த்தை சந்திரதீபம் ஆசிரியர் போல் 10 பேர் இருந்தால் இலங்கையில உள்ள எல்லாக் கோவில்களையும் சீர்கருத்த முடியும் என்றர். ஆறுபடை வீட்டில் ஒன்றன பொலிகண்டி கந்தவனலயத்தில்நடைபெறும் கேவலம்கெட்ட முறைகளைப் பாாத்தால் எல்லோரும் அதிசயிப்பார்கள். காரணம் எஜமான் கொடுமை. திருப்பணி எனப பொதுமக்கள் பணம் கொடுப்பது; ஆனல் அவற்றையெல்லாம் தமது சுகபோக வாழ்க்கைக்குச் செலவழிக்கிறர் அந்த எஜமான். ஒரு ஆலயத்தை நிர்வகிப்பது அந்த ஆலய எஜமான் அல்லது தர்மகர்த்தா சபை. கோயில் சொத்துக்களை எஜமான் சாப்பிட்டால் எப்படி கோயில்நிலமை முன்னேறும். இந்நிலையைதான் கந்தவனக்கடவை ஆலயத்திலும் நடைபெறுகிறது.

1950-ம் ஆண்டு திரு. செல்லையா பிள்ளை என்பவரால் இக்கோயில் குடமுழுக்கு நடைபெற்றது. பின்னர் வாலஸ்தாபனம் செய்யப்பெற்று ஏழு ஆண்டுகளாகிவிட்டது. அவருடைய புத்திரர் திரு. யோகேந்திரம் இதுவரையில் கோவிலைப்பற்றிய எவ்வித யோசனையுமின்றி காங்கேசன் தொழிற்சாலையில் கடமையாற்றி வருகிறார். கோவிலில பாமபு குடிகொள்கிறது. கோவிலில் மூர்த்திகளுக்கு ஆசனமின்றி அவை தரையில வைக்கப்பட்டிருக்கின்றது. சுவாமிகள் அபிஷேகம் முடிந்து நிலத்திலுள்ள நீரைத் தட்டும்பொழுது அவை சுவாமியின மேற்படும். ஆனல் பூசகர் என்ன செய்வார். முறைபபடி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குச் செய்வது சாஸ்திரமுறை. ஆனல் இவர்களைக்கேட்டால் காடைத்தனம் புரிகிறர்கள். கோயில் அர்ச்சகருக்குச் சம்பளம் இல்லை. உண்டியல் வருமானத்தில் மூன்றிலொருபங்கு எஜமானனுக்கு. மற்றைய இருபங்கும் பூசகருக்கு. ஆனல் அவரேதான அரிசி விறகு எண்ணெய் யாவும் அவர் கொண்டுபோய் நடாத்தவேண்டும். பூசைப்பெட்டி (மோதக வருமானம்) எஜமானுக்கே; இப்படியானல் எப்படி கோயில் நிர்வாகம். கோயிலுக்கு என 20 மூடை நெல் வருடத்தில்வரும். ஆனல் எல்லாம் அவர்கள் கார் கொண்டுவந்து எடுத்துப்போய் குற்றி இடியப்பம் பிழிந்து சாப்பிடுவார்கள். திருக்கேதீஸ்வர நிர்வாக சபை காரியதரிசி இருடைய (ஒன்று விட்ட) தமயன். எல்லோரும் சூழ்ண்டும் பேர்வழிகள். திரு யோகேந்திரம் நிர்வாகத்தில் தலைகாட்டுவதே இல்லை. அவருடைய மாமன் தான் இந்த சீர்கேட்டு தீர்க்கதரிசி. பழைய நிவேதியம் வைத்து திருவெம்பாவைப் பூசைக்கு கொடுப்பார் இந்தக் கிழட்டு மனேஜர். தற்போது இந்த கோயில் நிர்வாக சபையிடம் ஒப்படைப்பதற்காக [illegible] நடைபெறுகிறது. [illegible]

# அநாதைக் கொடி மோசடிபற்றி ஆறுமுகம் கந்தையா தரும் பதில்

ஆறுமுகம் கந்தையா ஜே. பி.
மரண விசாரணை அதிகாரி
கண்டிறோட்,
கைதடி.
20—6—80

உயர்திரு வை. நல்லையா அவர்கள்

அருளன்புடையீர்,

தாங்கள் 18—6—80ல் வெளியிட்ட சந்திரதீபத்தின் செய்தியை அறிந்து மனம்வருந்துகிறேம். சந்திரதீப ஆசிரியராகிய தாங்கள் குறிப்பிட்ட விடயங்கள் யாவும் உண்மையா? என ஆரர்ய்ந்து வெளியிடுதலே நன்று. இதற்கென ஒரு சபையிருந்து எல்லாவற்றையும் கண்காணிக்கின்றது. இப்போ யான் பொதுச் செயலாளர் பதவி வகிக்கவில்லை. மாதமொரு கூட்டம் நடைபெறுகின்றது. எல்லாம் ஒழுங்காக [illegible] நடைபெறுகின்றது. [illegible] பரீட்சித்துப் பார்க்கவும். எல்லாவற்றையும் குழப்பாதீர்கள். நீங்களும் குழம்பாதீர்கள். பிழையைக் கண்டியுங்கள். சரியைப்போற்றுங்கள் பிழையை ஆதாரத்தோடு கண்டியுங்கள். ஆண்டவன் என்னை நல்ல நிலையில் வைத்திருக்கின்ருர். எனது பணியைப்போற்றும் முகமாக ஒரு சைவப் பெரியார் கூட ரூபா இருபதினுயிரம் பெறுமதியான காணியை எனது பெயருக்கு எனக்கு அறுதியாக அன்பளிப்பாக வாங்கித்தந்தார். அதைக்கூட (நான்) அப்பணத்தை நல்லாக நடக்கும் ஸ்தாபனங்களுக்கு வருடம் ரூபா ஆயிரம வீதம் வழங்கிவருகிறேன.

ஏன் இப்படி மாசுகற்பிக்கிறீர்கள். சிலர் சந்திரதீபம் வாங்காவிட்டால் குறையாக எழுதுவார் என்கிறர்கள் ஆனல் நான் சந்திரதீப சந்தாதாராகியும் இப்படியா செய்கிறீர்கள்.

இங்ஙனம்
ஆ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பிரச்சனை கோயில் உற்சவத்தை நிறுத்தியது

## நெறியுடைய மைந்தரை நீக்கமுற்படும் தந்தை

சைவசமயக் கோட்பாட்டின் படி ஓர் குடும்பத்தில் மூத்தபுதல்வனுக்கே தகப்பனின் உரிமைகள் யாவும் வழங்கப்படவேண்டுமென்று தேசவழமை கூறிவந்தது. அதன் படியே இன்று எண்பது வயதை எட்டிப்பிடிக்கும் நிலையிலிருக்கும் சங்கானை அரசடி வைரவர் கோவில் குருக்களாயிருந்தவருக்குக் கொடுக்கப்பட்டதாம். அவரும் அதைஏற்றுத்திறம்படப் பூசை உற்சவங்கள் செய்து சங்கானையில் ஓர் அரசடி வைரவர் வாசஞ்செய்கிருர் என்பதை ஊருக்கும் உலகுக்கும் காட்டி வந்தார். முதுபெரும் கிழவராகக் காட்சியளிக்கும் அந்தக் குருக்கள்.

தனக்கு வயதானனும் தன் வம்ச மரபின்படி தனது மூத்த மகனுக்கு குருப்பட்டம் தரிப்பித்து மேற்படி அரசடி வைரவர் கோவில் உரிமையையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்தார்.

மூத்தமகனும் முன்னோர் வழிநடந்து ஆலயத்தை அழகாகப் பரிபாலித்து வந்தார். அதனுல் அவ்வூர் மக்களும் அந்தமூத்தமகனின் மேல் பேரன்பு கொண்டிருந்தனர்.

இது இவ்வாறிருக்க எல்லாம் மூத்தோருக்கோ என்ற கேள்வி இளைஞரான சிறுப்பருக்கு ஏற்பட்டதோ அல்லது இவர்களுக்கு இடையில் தரகு செய்துவரும் பலருக்கு ஏற்பட்டதோ அல்லது அந்த வயசான சைவக்குருக்களுக்குத் தான் ஏற்பட்டதோ தெரியவில்லை. முன்னவரின் உரிமையைப் பறித்து பின்னவருக்கும்சேர ஒப்படைத்துவிட்டார் வயோதிபரான சைவக் குருக்கள்.

இளையவருக்கும் மூத்தவருக்கும் இடையில் குரோதம் வளர்ந்துவிட்டது மூத்தவர்தான்குருப்பட்டம் தரித்துள்ளார். எனவே அவர்தான் ஆலயத்தை நடாத்த வேண்டுமென்பது அவ்வூர்மக்களின்விருப்பமாகும். ஆனுல் மூத்தவரோ நான் எப்படி உற்சவத்தை நடாத்தமுடியும்? இப்போதே மனைவிரோதத்தால் மாற்றுந்தாய் பிள்ளைகளாக நாம் ஆகிவிட்டோம். இல்லை இல்லை ஆக்கப்பட்டோம் உற்சவத்தையும் நடாத்தினுல் உறவே ஏற்படமுடியாத எனக்கு அவர் தம்பியன்று; நான் அவர்க்கு அண்ணன் அன்று என்னும் முறையில் எங்கெங்கோ போயிடுவோம் என்கிருர்.

இளையவரோ சிறுப்பர் சீவியத்துக்கு வழியுமுண்டு. இதைத் தயவு செய்து சிந்தையிற்கொண்டு அண்ணன் வாழட்டும். நான் அவர் அயலில் ஒற்றுமையாக உறவாடவிடட்டும் என்று இந்த அரசடி வைரவர் சற்றுச் சிந்திப்பாராகில் சிறுப்பர் சிறுப்பராகவும் குருக்கள் குருக்களாகவும் குறையின்றி ஒற்றுமையாக வாழலாம் என்று கருதுகிறேம். முதுபெரும் சைவக்குருக்களும் மூத்தமகனும் முன்நிற்க இளைய மகனுர் அதைக்கண்டு இளமுறுவல் செய்ய அயலவரும் அரசடி வைரவரும் ஆனந்தக் கூத்தாடுவர் என்று சந்திரதீபம் எதிர்பார்த்து நின்று எல்லோரையும் வேண்டிக்கொள்கிறது.

சைவம் தழைக்கட்டும் தெய்வம் வாழட்டும் குருக்கள் கும்பிடட்டும் அண்ணன் அரசடி வைரவரை அன்புடன் பேணட்டும் சின்னன் சிறப்பர் வேலையில் சிறப்புறட்டும் என்பதே எமது விருப்பமாகும்.

# கத்தோலிக்கரிடம் பணம் பெற்று சைவத்தை இகழுதாம் சந்திரதீபம்!

## சிவதொண்டன் நிலையம் பேசுகிறது.

சிவதொண்டன் நிலையம் அதற்குரிய அறத்தை முற்றிலும் மறந்து பொய்யும் பொறாமையும் உண்மையிலாச் செயலைப்பற்றிய கதையையும் பரப்புவதில் மிகவேகமாக முன்னேறுவது கண்டு சந்திரதீபம் ஆழ்ந்த கவலை கொள்கிறது.

சமீபத்தில் சிவதொண்டன் நிலையத்தின் தவறான செயல் பற்றி நாம் குறிப்பிட்டதை மறுக்க முடியாது மறைமுகமாக ஏற்றுக்கொண்டு சந்திரதீபம் பற்றி தவறான கருத்துக்களை நிர்வாகத்தினர் அங்கத்தவரிடமே பரப்புகின்றனர். அதாவது நாம் பத்திரிகை நடத்தி சைவக் கோயில்களையும் பிராமணர்களையும் கண்டித்து சைவத்தைக் கீழானது என்று சொல்லிட கத்தோலிக்கர் பணம் கொடுக்கிருர்கள் என்ற கதையைப் பரபபுகிருர்கள். இதை உண்மையானது என சிவதொண்டன் நிலையம் நிரூபிக்கவேண்டும்! அல்லது விளக்கவேண்டும். எமது குருமணியான யோகசுவாமிகட்கு தவறான வழி சத்திரசிகிச்சை செய்து நடக்க முடியாமல் செய்தது போல் சந்திரதீபத்தை அவர்கள் தவறான பிரசார மூலம் நிற்பாட்ட முடியாது.

# கமுகமரத்தில் கொடியேற்றினுர்!

பனைமரத்தில் கொடியேறினுல் பணிந்தெழுந்து வலம் வந்து தீர்த்தம்பருகித் திளைக்கும் ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்து திருப்பணிச்சபையால் சிறப்புடன் கொண்டாடி மகிழும் குகதாசர் அயலிலுள்ள சாவற்காடு என்னுமிடத்தில் இருக்கும் வைரவர் கோயிலில் கமுகமரம் நாட்டி அதில் கொடியேற்றினுர். தட்டியில் கொடி கட்டினுர் என்றும் சொல்லப்படுகிறது. முடிவு தினத்தன்று கோயில் முகாமையாளருடன் அர்ச்சனைக் காசால்எழுந்த பிரச்சனையில் தூடண வார்த்தைகளால் ஏசினராம். பனைமரத்தில் கொடியேற்றுவாரது அண்ணன் குகதாசர் இவைபோன்றன அல்லாது இன்னும் எத்தனையோ செய்வார்.

## பரமாச்சாரியரும் பூசகரும் பூசலிட்டனர்

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலில் 10 நாளும் பிரசங்கம் செய்வதாக தமது ஆட்கள் மூலம் ஒழுங்கு செய்து கொண்டு நல்லை ஆதீனம் பரமாச்சாரியார் பிரசங்கத்திற்குச்சென்றிருந்தார். அன்று கோயில் பூசகருடன் வாக்குவாதப் பட்டுக் கொண்டார். கோயில்ப் பூசகர் இவரது பிரசங்கம் முறையற்றது; திருப்பித்திருப்பி ஒன்றைத்தான் சொல்லுகிருர்; என ஏசினுராம். அதனுலே பரமாச்சாரியார் அவருடன் சண்டையிட்டுக் கொண்டு அடுத்த நாள் பிரசங்கத்திற்கு போகவில்லையாம். அது முடிந்து மூன்றுவது நாட்போக அன்றும் பூசகர் இவரோடு வாக்குவாதப்பட்டாராம். அதனுலே அன்றோடு பரமாச்சாரியார் தமது பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டாராம். மடாதிபதியாய்க் கௌரவத்துடன் இருக்கவேண்டியவர் மடமை மிக்க செயல்களைச்செய்து தன்னையும் கெடுத்து தனது மதிப்பையும் கெடுத்து சமயத்தையும் கெடுத்துக் கொண்டிருப்பதை சந்திரதீபம் பல தடவை சுட்டிக் காட்டியிருக்கிறது. பரமாச்சாரியார் இனியாவது திருந்துவாரா?

# விவேகநந்த விழா பேச்சாளர் சைவமக்களை இகழ்ந்தனராம்!

சமீபத்தில் நடைபெற்ற விவேகானந்தர் விழாவில பேசிய ஒரு தென்இந்தியப் பேச்சாளர் இந்துமக்கள் பல கடவுளை வைத்திருப்பதால் எந்தக்கடவுளைக் கும்பிடுவதென்று சொல்ல மாட்டார்கள். அவர்கள் முதல் நூல் எதுவென்று சொல்லத் தெரியாதவர்கள்; என்று ஆற்றங்கரை போன முஸ்லீம்; இந்து; கிறிஸ்தவரின் கதையுடன் பேதைத்தன பொய்மொழி பல பேசினராம.

உண்மையில் இராமகிருஷ்ணர் காளியை வணங்கியவர். அவர் வழி விவேகானந்தர் அவரும் ஏந்தா சொன்னுர். ஆனுல் எங்கள் நாயன்மார் சிறுதெய்வ வழிபாடுகள் இல்லாதவர். 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' எனபாடியவர்கள். சிறு தெய்வவழிபாடு சில எல்லைக்கு அப்பால் பிரயோசனப்படாது.

ஆனுல் சைவ நெறி அப்படி அல்ல. சைவ நெறியில் அந்தச் சமயம் இந்தச் சமயம் எல்லாம் ஒன்று என்ற பேச்சிற்கு இடமில்லாதது. சைவம் ஒரு சமயக் கோட்பாடிலாது சைவம் என்றுல் சிவன் அவன் அருள் செய்த வேதம் அங்கம், ஆகமம், புராணம் இவற்றின வழியாக வந்தது. அதாவது சைவம் என்பது 96 தத்துவமும் கடந்த முழுமுதற் பொருளாய கடவுளை அடைய கடவுள் காட்டிய வழியையாகும். அந்த வழி பூவும் நீரும புண்ணியச் செய்கையுமாகும்.

பாவம் தென் இந்தியப்பேச்சாளர் எவருக்குமே இந்த உண்மை விளங்காது இட்டலி, சட்டினி உப்புமா, ரூவாதம்தோசை, தக்காளிப் பழஇரசம், சாம்பார் போல சைவத்தை நினைக்கிறுர். தென் இந்தியர் எவர்க்குமே சைவம் விளங்காது. தெனஇந்தியர்க்கு சமயம் சினிமா! அவாகது வைதீகம் தெரியாது அதன் படி ஒழுகவும் மாட்டார். தென் இந்தியாவில இருந்து இங்கு வந்துபோன ஒரு பேச்சாளரை உண்மையுடைய வைதீக நெறி ஒழுகுபவர் எனக்காட்ட வல்லீரோ? இங்கு வந்து பணமும் பொருளும் தணடிதகாத வழி அப்பொருள் கொண்டு ஒருவரும் செல்லவில்லையோ?.

## முதல்நாள் புக்கையே மூன்றும் நாளும்

யாழ்ப்பாணம் வில்லூன்றி பிள்ளையார் கோயிலில் உள்ள ஐயர் முதல் நாள் சமைத்த புக்கையை அன்றும் அடுத்த நாளும் மூன்றுவது நாளும் வைத்து சுவாமிக்கு நெவேதுத்தாராம்.

மூன்றுவது நாள் நாறின புக்கையை கண்ட கோயில் தர்மகர்த்தா அவர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர். அப்புக்கையை எடுத்துச் சென்று ஐயரது மனைவி [illegible] த்து ஒரு [illegible] குடும்பம் கோயிலால் நீக்கப்பட்டதாம்.

# நயினுதீவுப் பிராமணருக்கு தங்கக்காசு தாம்சொல்வது உண்மையெனக் காட்டினுல் சந்திரதீபம் கட்டித்தரும்

நயினுதீவு தேர் உற்சவத்தன்று வசந்தமண்டப பூசையின் போது "பஞ்சப்புராணம் அவதாரிக" என்று ஓர் பிராமணன் கூறினுன். வானொலியில் கேட்கப்பட்டது.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம்இவ்வளவும் புராணமோ? சம்பந்தர்முதல் நாயன்மார் புராணமோ பாடினர்.

அடுத்து அவங்கள் விசுவநாதக் குருக்கள் காசு கொடுக்க பத்திரிகை நடத்துகிறேன் என்று இராசவீதியைச் சேர்ந்ததோர் சமாதான நீதிவானிடம் சொன்னுங்களாம். தையும் அவங்கள் நிரூபிக்கட்டும்.

## சீரணிப் பூசகர் பெண்ணுடன் ஓட்டம்

சீரணி நாகம்மாள் கோயிலில் பூசை புரியும் ஐயர் ஒருவர் தந்தை தாயருக்குத் தெரியாமல் ஒருநாள்ச் சாயந்தரம் ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு இல்லம் சேர்ந்தாராம். தமது மகளைக்காணுத அப்பெண்ணின் தாய் தந்தையர் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அர்ச்சகரும் அப்பெண்ணும் தமக்கு வயது வந்தபடியால் தாங்கள் இருவரும் மனச்சம்மதத்துடன் ஓடினேம் என்று பொலிஸில் கையொப்பம் வைத்துக்கொண்டனராம். இவர் சீரணியில இம்முறை கொடியேற்றிய குருக்கள் அவர்களின் தம்பியவார் எனப் பேசப்படுகிறது.

## நோயுற்ற பிராமணப்பெண் வைத்தியரிடம் தஞ்சம்

மானிப்பாயில் உள்ள ஓர் முருகன் கோயில் அர்ச்சகரின் இளம் மனைவி தன்னை நவாலியைச் சேர்ந்த வில்லிசை ஐயரும் சுண்ணாகத்தைச் சேர்ந்த மாமோடன் ஐயரும தமக்கு அடிக்கடி கொடுத்த தொந்தரவால் [illegible]ப்பட்டுக் கொண்டேன் என நவாலியைச் சேர்ந்த ஒரு வைத்தியரின் வைத்திய நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுராம். இதை அறிந்த அப்பெண்ணின் தகப்பனும் தமயனும் அப்பெண்ணை வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கும் படி கேட்டனராம். சுகயீனம் மாறுமல் கூட்டிக்கொண்டு போக வேண்டாம் என்றுசொல்ல தமயன் வைத்தியருடன் வாதாடி அவரிடம் பலாத்காரம் பிரயோகித்து அப்பெண்ணை அழைத்துச் சென்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலின்பெயரால் நடைபெறும் பொய்ப்பிரசாரங்களில் ஏமாறக்கூடாது

## ஏழுசெய்வாய் எலுமிச்சம்பழம் மெழுகுதிரியால் சைவமக்களின் எந்தப்பிரச்சினையும் தீராது

அந்தோனியார் கோயிலுக்கு அடுக்காக வாரஞ் சென்று தரிசித்து கடசி வாரத்தில் ஏழைகளுக்கு உணவுப் பொட்டலம் விநியோகித்தால் நினைத்த காரியம் கைகூடும என்பதும், துர்க்கை அம்மன் கோவிலுக்குச் சென்று அப்படிச் செய்து பிறிந்த எலுமிச்சம் கோதில் நல்லெண்ணை விளக்கேற்றி வழிபட்டால் கன்னிப் பெண்களுக்கும் காளையர்களுக்கும் சீக்கிரம் கலியாணம் கைகூடும் என்பதும் பொறனை கிறீஸ்த்தவ ஆலயத்தில் உங்கள் பிரச்சனைகளை தபாலில் எழுதிப் போட்டால் ஆண்டவன் அநுக்கிரகம் கிடைக்குமென்பதும் துர்ப்பிரசாரங்கள். மக்களே இந்த உண்மையை உணருங்கள்.

துர்க்கை அம்மன் ஆலயத்தை முதன் முதலாக யோகசுவாமியே புனரமைக்கச் சொன்னுர். இதை சுவகமியின் அடியார் ருவர் புனரமைக்க நடவடிக்கை எடுத்தார். அவருக்கு இப்போ வயது 89 ஆகிறது. அவர் இன்னும் பிரமச்சாரியாகவே இருக்கிறுர். அக்கோயில் விவகாரங்களி மூழ்கி நனைந்து ஊறியிருக்கும் துர்க்கா துரந்தரி இன்றும் கன்னியாகவே காலங்கழிக்கிறுர். இவர்களுக்கு அருள் பாலிபாத துர்க்கா தேவியா அங்கு செல்லும் கன்னியர்க்கும் காளையர்க்கும் அருள் பாலிக்கப்போகிறுள். துர்ப்பிரசாரத்தை நம்பி மோசம் போகாதீர்கள் உண்மையை உணருங்கள்.

இதோ உண்மை:—
சிவன் இன்றி சைவம் இல்லை. சைவம் உண்டேல் சிவனுண்டு என்பது அருத்தாபத்தி. சைவம் சிவ மதம்; இம் மதத்திற்கு சிவ வழிபாடே ஆதாரமாகும். நம் நாட்டில் சைவ மதத்தினைத் தழுவியுள்ள மக்கள் சிவனை தம் மதத்திற்கு தலைவராகக் கொண்டுள்ளாரா? கொண்டுள்ளாராயின் அவனை வழிபடுகின்றுரா? மேல் உள்ள வினுக்களுக்கு விடை எதிர் மறையில் உள்ளவை எனக் காணப்படுகிறது. அஃதாவது சைவர் என்பார் சிவனைத் தலைவனுகக் கொள்ளவுமில்லை. அவனை வழிபட்டு வருகிறுருமில்லை என்பதனையும் பற்றி எங்ஙனம் சொல்லலாம்? ஆகையால் இது பன்மை பற்றிய முடிவு என்று அறிவாளிகள் கொள்ளக் கடவர்.

நம் சைவ மக்களிற் பெருப்பாலார் சுருதி யுக்தி அநுபவம் என்னும் மூன்றினையும் சிறிதும் சிந்தனை செய்யாது இருககின்றனர். எவரும் இம் மூன்றினையும் விளங்கிக் கொள்ளும் வகையில் சிறிது சொல்வோம். இவ் வாழ்வில் கலியாணத் தடை கணவன் மனைவி பிரிந்துறைதல் இருவரும் சதா சண்டையிடுதல் கலியாணம் தள்ளுபபடுதல் கலியாணப் பதிவு செய்தும் கலியகணமாகது இருத்தல் படிப்பில் பிற்போக்கு தொழில் விருத்தியின்மை பணமுடை எதிரிகள் தொல்லை பல்வகைப் பிணிகள் இவையெல்லாம் பெரும்பாலும் சிவநிந்தனையால் ஏற்படுவது. சைவர் சிவபிரானை வழிபடாததினுலோ முற்பிறவியில் சிவநிந்தனை செய்தவர் சொத்தை அபகரித்து தமக்கு பாவித்து அனுபவித்தவர்கள் என்போர்க்கு இப்பீடை உண்டாகின்றது. இத் துர்ப்பாக்கியம் முன்னைவினையால் வந்தது. இப்பொழுது நாம் அனுபவிக்கும் பிராரத்துவ கன்மம் முற்பிறவிகளில் செய்த கன்மத்தின் ஒரு பகுதி.

கன்ம இலக்கணம் சைவருக்கு மட்டுமன்றி வைதிக மதங்கள் யாவற்றிற்கும் பொது. வைதிக மதமல்லாத பௌத்தத்திற்கும் பொருந்தும். இவர்கள் "விடமுண்ட கண்டன்" ஆகிய சிவபெருமானை முற்பிறவியில் அவமதித்தவர் ஆகின்றனர் என்று நாம் அநுமானித்துக் கொள்ளலாம். "முன்னம் நீர் செய் பாவத்தால் மூர்த்தி பாதஞ் சிந்தியாது இன்னம்நீர் இடும்பையில மூழ்கிறீர் எழுமினுே" (திருஞானசம்பந்தர் தேவாரம்—திருக்கோடிககா) மானுடராய் நாம் எல்லோருமே இடும்பையில் மூழ்கியுள்ளோம் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அந்த இடும்பைதான் எத்தகையது? உலகியலில் நின்று நோக்கும் நாம கலியாணம் செய்ய விரும்புகின்றவர்களுக்குக் கலியாணம் கிட்டாமலிருக்கும் பொழுது அவர்கள் நிலைக்கு இரங்குகிறோம்,

சுருதி மூலம் சைவருக்கு வழிபடு கடவுள் சிவபிரான் ஒருவனே என்று சாதித்தல் வேண்டும். இஃது ஆகமம் பிரமாணம் எனப்படும். வேதங்கள் ஆகமங்கள் திருமந்திரம் தேவாரம் திருவாசகம் சிவஞான போதம் சிவஞானசித்தியார் என்பன நமக்கு முக்கிய பிரமாண நூல்களாகும். இவற்றின்படி சைவமதத்தின் முழுமுதற் கடவுள் யாவன்? அவனே சிவபெருமான் என்பது அந்த நூல்களின் முடிபு.

1. "எவன் காத்து வருகின்றுனே அவனே உருத்திரன்—சிவன். அவன ஏகன். ஒருவனுய் உளன். அவனை இரண்டாமவன் என்று சொல்வதற்கு வேறு எவனும் இலன்" என்ற வடமொழிச் சுவேதாசுவதா உபநிடதம் சொல்லும்.

2' திருவாசகத்தில்,

கோவில் சுடுகாடு கொல்புலித்
தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனி
யன் காணேடி
தாயுமிலி தந்தையிலி தான் தனி
யன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடி
காண் சாழலோ'

என்று வருமிடத்து, "தான் தனியன்" என்ற மணிவாசகப்பெருமான் சொல்வதைக் கவனித்தல்வேண்டும். மேலும் புராணக் கதைகளிலும், சிவனுக்குத் தாயார் யார்? தந்தை யார் யார்? என்று கூறப்படாமையினுல் தோற்றம் உற்பத்தி கூறும் கதையும் சிவனுக்கு இல்லை என்று இத் திருவாசகப பாவினுல் எவரும் எளிதில அறிந்துகொள்ளலாம்.

3. சுந்தரர் தேவாரத்திலும்

"முன்னேயெம் பெருமானை
மறந்தேன் கொல் மறவாது ஒழிந்
தேன்கொல் மறவாத சிந்தையால்
வாழ்வேன்
பொன்னே நன்மணியே வெணமுத்
தே, செம்பவளக் குன்றமே, ஈசன்
என்றுன்னையே புகழ்வேன்"

(திருவதிகைத் திருவீரட்டானம்) என்று வருதல் சிந்தனைக்குரியது.

4. முத்தி இலக்கணத்தில்; சீவான்மா இரண்டறக்கலத்தல் சிவபிரானேடுதான் எனபதனை "ஆனமா எதனை எதனைச் சார்ந்தால், அதன தன் சுபாவமே, தன் சுபாவமாய் அதுவதுவாய் நிற்பன் என்றும் இங்ஙனமாகலில் சிவனேடு ஒற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன் கணங்களாகிய எண்குணங்களுந் தன்றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன்" என்ற சிவஞானமாபாடியத்துட் பேசப்படும்.

இனி நம்மவருட் பெரும்பாலார் சிவபிரானை வழிபடுதலைவிட்டு அவனின் அம்சங்களை வழிபடுதல் தவறு? சிவஞானசித்தியாரே இதறகு விடை தருகின்றது.

ஒருவனே இராவணுதி பாவ
முற்றுற் போலத்
தருவன் இவ் வுருவமெல்லாந்
தன்மையுந் தெரியாருக்கும்
வருவடி வெல்லாஞ் சத்தி
சத்திதான் மரமுங்காழ்ப்பும்
இருமையும் போலமன்னிச்
சிவத்தினேடியைந்து நிற்கும்.
யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ஞர்தாம்
வருவாமற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும் இறக்கும்
பிறக்கும் [illegible]
ஆதலான் [illegible]

அறிர்தருள் செய்வன் அன்றே. மறைமலையடிகள் இதனை ஓர உவமை முகத்தால விளக்குகினுர். "நாடக அரங்கு புகுந்து பலகோலம் பூண்டு ஆடுவோன் அக் கோலங்களாற்றன் னியல்பு சிறிதும் மாறுது, தான் அவற்றின் வேறயினுற்போல இறைவனும் அன்பின் மிக்க அடியார்க்கு அருள்செய்தற்பொருட்டு அவர் அவர் நினைந்தஉணவுகள் பலவும்கொடுப்பாணுயினும் அவற்றுற் தன்னியல்பு சிறிதும் பிறழப்பெறுவான் அல்லன" (திருவாசக விரிவுரை). ஆதலினுலே உங்கள் இடும்பைகள் அழிய சிவபிரானுக்குச் சாந்திசெய்தல் வேண்டும். இதற்குப் பொன் தேவையில்லை. பொருள் தேவையில்லை. பூவும நீரும் கொணடு சிவத்தியானம் செய்தலே ஓரேவழி. சதாபஞ்சாட்சரத்தை உச்சரியுங்கள்.

உங்கள் ஜாதகங்களில் 7-ம் வீடு கெட்டிருந்தால் சல்யாணம் நடப்பது கஷ்டம். அவ் வீட்டை ராகுவோ, செவ்வாயோ, சனியோ தாக்கினுல் முற்பிறவியில் சிவ நிந்தனைசெய்தவர் என்று உடனே கூறிவிடலாம்.

கன்னிப்பெண்கள் கலியாணம் கைகூட திருவெம்பாவையில் கூறிய பாட்டை நினைவு கூருங்கள்.

முன்னைப் பழப்பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார்
அவருகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர்
எம்பாவாய். என்றும்
எங்கள் பேருமான்
உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப
ரல்லார்தோள் சேரற்க.
என்றும் வருவன

ஆகையால் கன்னிப் பெண்கள் மாகழிமாதத்தில் திருவாதிரை யோன்பெனவரும் பத்து நாட்களும் அதிகாலையில் எழுந்து நீராடி வீதியுடு சிவநாமம் சொல்லிப்பாடி தத்தமக்கு என்ற தானதர்மம் செய்து அன்று முழுவதும் நோன்பிருந்து சிவனுக்கு பூவும் நீருமிட்டு வழிபட்டு திருவெண்பாவைப் பாடல் முழுவதையும் வானெலியிற் கேட்காது தாம்தாம் பாடி சிவன்பால் அன்பு செய்து வருவாரேஆகில் தான் விரும்பிய சற்குணவனுன கணவனைப் பெறுவர். தொடர்ந்தும் இப்பெண்கள் சிவனை மறவாது வழிபட்டுவரின் குடும்பப் பிரச்சனையோ கணவன் மாருடைய தொல்லையோ பிள்ளைகளுக்கு நோயோ அல்லது பிள்ளைகளில்லாமல் போதலோ ஏற்படாது. வறுமை இருக்காது அடுத்து இப் பெண்கள் குடும்பவாழ்க்கையில் சேர்ந்தபின்பும் தானே தன் பிள்ளைகளோ அல்லது கணவனே சிவன் கோயில் சொத்தை அனுபவிப்பதையும் சிவதொண்டு செய்வாரை நிந்திப்பதையும் நீக்கிக் கொள்ளவும் வேண்டும். இப்படியாகச் செய்துவரின் இக்குடும்பங்கள் ஒரு காலமும் தளராது. குடும்பவாழ்க்கையுள்ள அனைவரும் தம்மைச் சிவனடியாளுக கருதிக்கொள்ள வேண்டும் பொய் பொறுமை இவற்றைக் கூடியவரையில் நீக்கி ஒழுங்காக நின்று சிவனை முழுமுதலாகக் கொண்டு வழிபட்டுவாான் ஒருகாலமும் ஒருதர்க்கும் ஒருகுறையும் இல்லை.

இன்று துர்க்கை கோயிலின் பொய்ப் பிரசாரத்துக்கு எடுபட்டுப் போய் விளக்கெரித்து காசுகொடுத்துக் கும்பிட்ட பல பெண்கள் பெருந் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர்.

கொழும்புத்துறையில் தன்கணவனின் பிரேதத்தின் முன் நின்று கொண்டு பலரும் காண ஐயோ துர்க்கை இரண்டரை வருசமாய் ஒரு செவ்வாயும் தவறவிடாமல் உன்னிடம் வந்தபலன் இதுதானே என்று குளறி அழுத வரலாறும் உண்டு. கண்டவர் கேட்டவர் பலரும் துர்க்கைகோயில் போகிறுரென்று போன பெண்களில் கைமுறிந்தவர் கால் முறிந்தவரும் உண்டு.

அந்தோனியார் கோயில் ஏமாற்றத்தில் எடுபட்டு அங்கு போய் மெழுகுதிரியும் பாணும் கொடுத்தவர் இன்றுதானும் தமது குடும்ப பிரச்சனையில் அழுகை தீர்ந்தாரில்லை, ஆனதனுலே வழியிருக்க வழியிலாத வழி தமிழர்களே உங்களுக்கு வேண்டாம். அன்புருவாகிய சிவனை மறந்த பழியே உங்களை அல்லற்படுத்துகிறது ஆதலினுல் சிவனை மறவாது நீங்கள் வாழுங்கள். அவன் நாமத்தைச் சொல்லி நல்லதைச் செய்புங்கள் சித்தத்தைச் சிவமாக சிந்தித்து எதையும் செய்யுங்கள் உங்கள் மேல் சிறப்பும் செல்வமும் என்றும் பெருகும்.

## பொன்னுடையின் அர்த்தம் என்ன?

திருநெல்வேலி காளி அம்பாள் ஆலயத்தில் சென்ற இருவருட காலமாக நடந்துவந்த வருடாந்த மகோற்சவத்தில் திருவிழா முழுமைக்கும் ஒலி பெருக்கி வாடகைக்கு விட்ட ஒலி பெருக்கி உரிமையாளருக்கு பொன்னுடை போர்த்துக் கௌரவித்தார்களா . ஒவ்வொரு உபயத்திற்கும் உரிய பணத்தைப் பெற்றுக் கொண்ட ஒலிபெருக்கி உரிமையாளருக்கு பொனுடை போர்ந்தது எதற்காக என்று தான் தெரியவில்லை.

இந்த ஒலிபெருக்கி உரிமையாளர் ஒருமுறை பண்டிதமணிக்கு விழாவெடுத்த விழாச் சபையினர்க்கு தான ஒலிபெருக்கி வாடகைக்கு விட்ட பணத்தை வாங்கிக்கொண்டு ரசீது எழுதிக்கொடுக்கமுடியாது துணிறியதாகத் தெரியவருகிவது.

இந்தப்பொன்னுடை அவர் கவி நயத்தோற்கோ அனறிப் பாடலைத் திறமையாக ஒலி பரப்பியதற்காகவோ இன்றேல் இரவிரவாக ஒலிபெருக்கி [illegible] அயலிலுள்ளவர்களின் [illegible]த்தைக் குழப்பியதற்காகவோ பொன்னுடை போர்த்தார்கள் என்பதை நிர்வாகம் தெரியப்படுத்தினுல் மிகநன்று. கீவுலிக்கூடும் செம்பரகச் சீவினுல் அற்றும் பொன்னுடை போரப்பார் போலிருக்கிறது.

பொன்னுடை என்பதன் மதிப்பு இதனுல் அப் பொன்னுடைக்கு அற்றுப் போகிறது என்பது சந்திரதீபத்தின கவலையாகிறது.

## கொடியேறுகையில் பொறு பொறு....!

திருநெல்வேலியிலுள்ள முத்துமாரியம்மன் ஆலயத்துல் வருடாந்தம் நடைபெறும் மகோற்சவக்கொடியேற்று விழாவின் போது கொடியேற்றம் நடைபெறுவதற்கு வேண்டிய சகல விஷயங்களும் பூர்த்தியடைந்து கொடியும் மேலே ஏற்றப்படுவதற்கு ஆயத்தமாகக் கட்டி மேளம், மணி, சங்கு முதலிய பல வாத்தியங்களும் ஒலிக்கத்தொடங்கி கொடியும் கொடிமரததின் அரைவா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறு பொறு என்றனர்.....!

சிக்கு மேலாக இழுக்கப்பட்டுவிட்டது. அப்பொழுது 'பொறு பொறு என்ற குரல்கள் பல திக்குகளிலிருந்தும் வந்தது. கொடி அரைக்கம்பத்தில் நிறுத்தப்பட்டதும் சிலர் தாம் அரையிற் கட்டியிருந்த சால்வையை சரிசெய்துகொண்டு படப்பிடிப்பிற்கு ஆயத்தமானார்கள். கழுத்திலே மின்னிய தங்கச்சங்கிலி கையிலே ஒலித்த மோதிரம் அவர்கள் மெய்யிலே இழுத்திருந்த சந்தனக்குறி அத்தனையும் போட்டோவில் பிடிபடத் தக்கதாக அம்பாளுக்கும் கொடி மரத்துக்கும் அயலில் அடியார்கள் வரிசையாக நிற்கப் போட்டோவும் எடுக்கப்பட்டதாம்.

என்னே! வேடிக்கையாக இன்று மக்கள் கொடியேற்று விழாவையும் செய்து போட்டோவும் பிடித்துவிடுகிறார்கள். இதுதற்கால நாகரிகத்துக்கு முற்றும் பொருந்துமாயினும் ஆலயங்களில் இப்படிப் படப்பிடிப்புக்கள் செய்வது சற்றும் பொருந்தாது என்று சந்திரதீபம் அறியத்தருகிறது.

கொடியேற்றிய குருக்களின் அறிவுக் குறைவையும் உபயகாரர் முதல் பலரின் அறிவுக்குறைவையும் கண்டு அம்பாள் வெட்கப்பட்டு எழுந்தோடாதிருந்தாளோ என்பது சந்திரதீபத்தின் சந்தேகம இச்செயல் தவறு என்று சொல்லி இழுத்த சயிற்றை பிடித்துக்கொண்டு கழுதை சுமந்தது போல் நின்ற பிராமணரையும் இனி மேலும் பிராமணன் எனலாமா

நாம் தேவையில்லாமல் பிராமணரை மட்டும் கண்டிக்கிறோம் என சொல்வோர் இதற்கு என் சொல்வார்? இக்குற்றம் யாருடையது? இழுத்த சயிற்றை இடையில் நிறுத்திய பிராமணனுடையதா? அல்லது பொறு பெரறு என்றவருடையதா?

## பனிப்புலம்அம்பாளுக்குபூசையின்றிகதவடைப்பு வழக்கின் பின் பூசை செய்வதால் பயனில்லை

உண்மையகத் தான் கூறுகிறோம் பண்ணாகத்தைச் சேர்ந்த பனிப்புலத்தில் குடிகொண்டிருக்கும் அம்பாள் தனக்கு எப்போது விடிவு வருமென்று ஏங்கி நிற்கின்றாள். ஏனெனில் பனிப்புலம் அம்பாள் கதவடைக்கப்பட்டு பூசையுமின்றி பூவும் பொட்டுமின்றி இருப்பது பலபல வேடந்தாங்கிப் பழுத்த சந்நியாசிகளாகக் கிராமவலம் வரும் பண்ணாகம் பனிப்புலவாசிகளுக்கு நாம் என்னதான் கூற முற்படுவோம்.

கண்ட கண்ட இடமெல்லாம் தண்டலுக்குச் செல்லும் இக்கிராம மக்கள் தங்கள் அம்மைக்கு இப்படியான இழிநிலை ஏற்படக் காரணமென்ன என்று ஏன்தான் கேள்வி எழுப்ப முன்வரவில்லை.

வற்றாது வாரிவாரிச் செல்லும் பனிப்புல வாசிகளுக்கு வருவாய் பற்றாதென்று யார் கூறுவர்?. அப்படியிருக்கும் பொழுது பனிப்புலம் அம்பாள் கதவடைக்கப்பட்டுப பரிதாபமாகப் பாரா முகமாக விடப்பட்டிருப்பது கண்டு எவரொருவர் முன்வந்திருக்கின்றார் இதைச்செய்வதற்கு. அதுவும் எதிர்க் கட்சித் தலைவரின் பிறப்பிடமான பண்ணாகத்திலுள்ள பனிப்புலம் அம்மைக்கு ஆவன செய்ய இனியாதல் எதிர்க்கட்சித் தலைவர் முன்வருவாரா?.

இன்றேல் அவ்வூர் மக்கள்தாமும் தங்கள் குறை குரோதங்களை மறந்து அம்பாளைத் தவிக்கவிடாது காப்பாற்ற முற்படவேண்டும்.

பிறன்பொருளை வாரும் போது அதனுடன் வந்த நஞ்சும் கூடவே வந்து அம்பாளை மங்கலமாக வாழவிடாமல், அமங்கலமாக்கி விட்டதோ என்பதையும நாம் அறியமுடியாதிருக்கிறது. பிறன்பொருளை நஞ்சாகக் கருதுங்கள் என்ற பெரியோர் வாக்கு அம்பாள் விஷயத்தில் மெய்த்து விட்டதோ தெரியவில்லை.

இப்பாயொரு கோவில் பூசை எதுவுமின்றி வீணபூட்டிக் கிடப்பது அவ்வூர் மக்கள் செய்து கொண்ட பாவமோ பழிகளோ என்பதும் தெரியவில்லை.

பனிப்புலம் அம்பாள் கதவடைக்கப்பட்டு இருப்பது அவ்வூர் மக்களுக்குள் எழுந்து கொண்ட கட்சிபேதமும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. எந்தவிதமான சூழ்சமான நிலை ஏற்பட்டாலும் ஒருபழிபாதகங்களுக்கு அஞ்சாது பலவஞ்சகச் செயல்கள் புரிந்து இக்கோயில் பூசையின்றிக் கிடக்க முன்நின்று உழைப்பவர் அவ்வூரைச் சேர்ந்த ஒரு உதவி அரசாங்க அதிபர் காரியலயத்தில் பணியாற்றும் ஒருவரே.

இந்தநிலையில் அரசாங்க சேவையிலீடுபடுமொருவரே தமது கிராமத்துக் கோவில் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு வாளாதிருப்பது வடிவாமோ?.

ஒரு சைவ ஆலயம் எங்குதான் இருந்தாலும் அது சைவ மக்கள் யாவர்க்கும் உருத்துடையதாகவே நாம் கருதுகிறோம்.

இதை பனிப்புல வாசிகள் யாவரும் கருத்திற்கொண்டு தம்குரோத மனப்பாங்குகளை மறந்து ஒன்றுபட்டு அம்பாளுக்கு வேண்டிய நித்திய பூசைகளையாகுதல் ஒழுங்காகச் செய்ய அம்பாள் கடாட்சத்தைக் கொடுப்பாள் என்று சந்திரதீபம் கருதுகிறது. மக்கள் மனதில் அழுக்கு நீங்கினுல் வழக்கு தேவையில்லை. ஒற்றுமை தானுக வரும்.

## காரைநகர் சிவன் கோவிலுக்கு கோபுரம்கட்டினுல், கட்டுபவர் உயிர் பிரியுமாம்

சென்ற சந்திரதீபத்தில் காரைநகர் சிவன்கோவில் கோபுரம் கட்டுவதற்கு ஏற்பட்ட தாமதத்தையும் பிரச்சனைகளையும்பற்றிக் கேட்டு எழுதியிருந்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

தேவாலயங்களில் ஒரு கருமத்தை ஆரம்பிக்கக்கூடாது. ஆரம்பித்துவிட்டால் அதை இடைநிறுத்தம் செய்யக்கூடாது என்பது ஒருபொதுவிதி. அதுவும சிவாலயத்தில் ஒரு கருமத்தை ஆரம்பித்தவிட்டால் தமது உயிர் தான் போவதாயிருந்தாலும் அதை விடாது ஒப்பேற்றவேண்டியது அக்கருமத்தை ஆரம்பித்தவரின் கடமையாகும்,

உண்மையில் அப்படி ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டு அதை இடைநிறுத்தம்செய்து அதற்குப் பல காரணங்களைக் கூறித் தப்பித்துக்கொள்ள முற்படுவது தருமமாமாகாது,

காரைநகர் சிவன்கோவில் கோபுர விவகாரம்பற்றி நாம் கூறியிருந்தவைகளை வாசித்தறிந்துவிட்டு ''அக்கோபுரவேலைக்குப் பணம் சேகரித்தவன் நான்'; என்று கூறிக்கொண்டு இன்னும் இருவருடன் ஒருநாள் காலை நேரம் என்னைவந்து சந்தித்து பத்திரிகையில்வந்த செய்தி பொய்யென்றும் தாம் கோபுரத்திற்காகச் சேர்த்த பணம் தம்மிடம் உண்டென்றும் கூறியதுடன் அந்தச் செய்தியைத் தந்தவர் யாரென்றும் என்னைக்கேட்டார்.

இச்செய்தியை எமக்குத் தந்தவர் யாரென்று கூறுவது பத்திரிகை தர்மமாகாது. அச்செய்தி முழுவதற்கும் நானே பொறுப்பு என்றும் கூறி, அப்படி அச்செய்தி தவறாயின் அதற்கு நீங்கள் 'உண்மை இதுதான்' என்று [illegible] வகையில் அதையும் நான் எமது பத்திரிகையில் பிரசுரிக்கத் தயாராக உள்ளேன் என்றேன்: உடன்வந்த இருவரும் ''அவர் சொல்வது சரி, நீங்கள் சேர்த்த பணத்தின் தொகைபற்றிய விபரத்தையும் தாலிகள் பற்றிய விபரத்தையும்பற்றி ஒரு கடிதத்தை அவரிடம் கொடுக்கலாம் என்று கூறினர்.

அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து 'கோபுரத்துக்குச் சேர்த்த பணத்தையும் தாலிகளையும் பற்றிய விபரத்தை அச்சிட்டு வெளியிடவேண்டுமென்ற விருப்பத்தைக் கோவிற் குருக்களிடம் தெரிவித்தேன். அதற்குக் குருக்கள் ''பணத்தைச் சேர்த்தது நீ. சேர்த்துவிட்டு மற்றவர்களுக்குக் கணக்குக் காட்டுவது என்ன முறை'' என்று குருக்கள் கூறிவிட்டு, இவங்களுக்கு என்ன கணக்குக் காட்டுவது என்று என்னைப் பார்த்துக் கோபித்தவர்; அப்படியிருக்க இப்பத்திரிகைக்கு எப்படிக் கணக்குக் காட்டுவது என்று அவர்களிடம்கேட்டார்.

இக்கோபுரத்தை ஆரம்பித்து பதின்மூன்று வருடங்கள் ஆகியும் காசை வைத்துக்கொண்டு பேசாதிருப்பது தவறல்லவா? அல்லது அப்பணத்தை ஒரு வங்கியில் போட்டுவைத்திருக்கலாமே என்றேன். அதைவிட்டு நீங்கள் பேசாதிருந்தால் பிரச்சனைகள் தோன்றும்தானே என்றேன்.

நாம் ஆரம்பித்தபடி கோபுரத்தைக் கட்டினுல் அதை முன்னின்று செய்விப்பவரது உயிர்பிரியுமென்று பெரிய சாமி என்னும் சிற்பி கூறினார் என்றும அதனுல் நான்பயந்து கோபுரம கட்டுவதை ஆரம்பிக்கவில்லை யென்றும் கூறினுர். அத்துடன் தான் உண்மையனவன் என்றும் தன்னைப் பொய்யன் என்று கருதி இந்தச் செய்தியைத் தந்தவரையும் அதைப் பிரசுரித்தவரை சிவன் கேட்பாரென்றும் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினர்.

சீரணி நாகம்மாள் ஆலயத்தின் சார்பில் பலர் இங்கு வந்து என்னை ஏசியது மட்டுமன்றிச் சண்டித்தனத்திற்கும் வந்துவிட்டனர். அது மட்டுமா? அயலிலுள்ள உயரப்புலம் அடங்காப்பிடாரிகளும் அவர்களுக்கு அடங்கிய ஆண்களும் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயவீதியை விளையாட்டு மைதானமாக்கும் பலரும் எனக்கு எத்தனையோ வகையில் தீங்கிழைக்கவும் சண்டித்தனம் செய்யவும் முற்பட்டார்கள் என்றுகூறி அவர்களை மரியதையாக அனுப்பிவைத்தேன்.

காரைநகர் சைவமக்களே உங்களுக்கோர் விண்ணப்பம்! உங்கள் ஊரில் ஓர் சைவமகாசபை உண்டு. அதன்மூலம் பல சைவ மாநாடுகளை விழாக்களை நடத்திவருகின்றீர்கள். ஆனதன்மையினுல் உங்களுக்கு சைவநீதி விளங்கவேண்டும். கோபுரங்கட்டப் பணம் சேர்த்து கோபுரத்தையும் ஆரம்பித்துவிட்டு இடையில் நிறுத்திவுடுவது வசவநீதிக்கு உகந்ததல்ல தமிழ் மரபுக்கும் அது உகந்ததல்ல.

''எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு'' என்றகுறள் வாக்கியத்துக்கு அமைய சிவன் கோவில் கோபுரவேலைக்கு இக்குறள் அமையாதோ; இது கோவில் குருக்களுக்கு புரியாதோ? அல்லது அதற்கு ஏற்பட்ட தடங்கல் பற்றி பொதுமக்களுக்கு அறிவியாது இருப்பது அந்த அந்தணர்க்கு அழகாமோ? இக் குறைகள் பற்றி கேட்கமுற்படுவார் மீது கோபிப்பது முறையாகுமா? காசுசேர்த்தவர் என்ன கணக்குக்காட்டுவது என்று கேட்ட அந்தணர் அக்கோயிலை எப்படி நெறிப்படுத்துகிறார் என்பதைக் காரைநகர் வாழ் சைவமக்களே உணர்ந்து கொள்ளுங்கள் .இவர் ஒரு உண்மையான குருக்கள்தானா என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வளவு காலமும் பேசாதிருந்துவிட்டு இப்போதுதான் அதுவும் நாம் பத்திரிகையில் எழுதியபின்பு தான் எமமைச் சிவன் கேட்கட்டும் என்று கூறும் நமசிவாயத்திற்கு பணத்தை சேர்த்துவிட்டுபேசாமலிருந்த குற்றத்திற்கு பரமசிவன் என்னதான் நமசிவாவாயத்திற்கு செய்யப் போகிறாரோ தெரியவில்லை. குருக்களும் என்னதான் கூறப்போகிறார் என்பதும் புரியவில்லை என்று சந்திரதீபம் உம்மைக் கேட்கிறது.

## கோவில் மதிப்பைக் கெடுக்கும் கேளிக்கைகளை நீக்குக!

### நல்லூர் அன்பர் கருத்து

இறைவன் சதா மோனநிலையில் தானிருக்கிறார். ஆகையால் இறைவன் குடிகொண்டிருக்கும் தலங்களில் அவனுடைய மோன நிலையை கலையாதிருங்கள். மோனநிலை கலைந்தால் அத் தலத்தில் அருள் அருகிவிடும். அதுமட்டுமல்லாது மோனநிலையைக் கலைத்தவர்கள் துன்புறுத்தப்பட்டு எரிவாய் நிரயத்திற்கு ஆளாவர். நெற்றிக்கண் சுவாலையில் அகப்பட்டு அழிந்துவிடுவர். அவர்களின் வாழ்வே மங்கிவிடும். அது பரம்பரையையும் தாக்கும். இது சத்தியம்.

எருசலேம் தேவாலயத்தில் பணம் மாற்றியவர்கள், பண்டமாற்றுச்செய்தவர்கள், வியாபாரம் செய்தவர்கள் களியாட்டுச் செய்தவர்களை இயேசு பெருமான் சவுக்கால் அடித்து விரட்டினார். ஏன்? மோனம் நிலவும் பொருட்டாக. இன்றோ சகல மத தேவஸ்தானங்களிலும் நடக்கும் களியாட்டுக்களையும் அதைப் புரிபவர்கள், ஊக்குவிப்போர்கள், முதலியோரை அடித்து விரட்ட ஆட்களில்லை. புத்த மதம் பெருமை பேசும், மோனநிலையிலிருந்த புத்த பிரானைப் போற்றும இலங்கை அரசு அதற்கெனச் சட்ட நடவடிக்கை எடுத்து இவர்களை விரட்ட மாட்டாதா. என்னும் சந்திரதீபம் தன் பேனுவின் சக்தி கொண்டு இவர்களை விரட்டியடிக்கும் என்று எண்ணுகிறோம. பழையபடி தேவஸ்தானங்கள் அருள் நிறைந்ததும் அற்புதம் நிறைந்ததுமாக மிளிரட்டும்.

முற்காலத்தில் சில தேவஸ்தானங்களுக்குப் பெரும் சிரத்தை எடுத்துத்தான் செல்ல வேண்டும். அப்போது அங்கே அருள, அற்புதம் பெருகி வழிந்தது. அடியார்கள் பயன் பெற்றார்கள். இக்காலம் சிரமமின்றி வணக்கத் தலங்களுக்கு இலகுவில செல்லலாம். அத்துடன் களியாட்டம், கோமாளித்தனம பெருகியது. மோனம் கலைந்தது. அருள் அற்றது. இடும்பைகள் பல்கிப்பெருகியது.

அன்று அருள் நிறைந்த பெயர் பெற்ற தேவஸ்தானங்கள் சிலவற்றை குறிப்பிடுகிறேன். தருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதர்காமம், மடு, செல்லச்சன்னதி, நல்லூரக் கந்தசாமி கோவில், தேவத்லத ஆலயம், தில்லையம்பலப் பிள்ளையார் கோவில், மட்டுவில் அம்மன கோவில், மாமாங்கம், சித்தாண்டி முருகன் கோவில், வறுப்பழை அம்மன் கோவில், வல்லிபுர ஆழ்வார் கோவில் போன்று பல தலங்கள் இருக்கின்றன.

எங்கெங்கே ஒலிபெருக்கியும், கண்ணைக் குருடுபடச் செய்யும் மின் விளக்குகள், மேவுவித மோனத்தைக் கலைக்கும் கருவிகள், உண்டாயதோ அங்கெல்லாம் இன்று அருள் அற்புதம கிடையாது. அதற்குப் பதிலாக துர்ப்பிரசாரம்செய்து அருள் நிறைந்ததாகக் காட்டுகிறார்கள். எங்கு மேற்படி நாகரிகம் பரவவில்லையோ அங்கு இன்றைக்கும் அருளும் அற்புதமும் நடந்துகொண்டே இருக்கிறது.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நடலையா அவர்களால் சிவநெறிப் பாதுகாப்பின் பொருட்டு சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org